GOKULAM

கோகுலம்



மதுரை மாணவர் ஸ்பெஷல்

ரூ.6/-

மார்ச் 2003

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



மலர்க் கொத்தில் ஒரு மலர் மட்டும் தனித்துவம் பெற்றுள்ளது.
எந்த மலர்?
ஏன்?



விடை : நீர்த்தாவர இனம் 'தாமரை'.

விடை : 1. அம்மாவின் பொட்டு 2. அப்பாவின் பனியன் 3.பாட்டில் 4. போர்டு, 5. பிரஷ்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2234 5622, 23, 24
தொலைநகல் :
044 - 2234 5621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


குழந்தைகள் மனம்
கவர்ந்த இதழ்

மார்ச் 2003 மலர் : 21 இதழ் : 2

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

மசாலா பாப்கார்ன்



உலகம் முழுவதும் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளில் மூன்றில் ஒரு பாகம் இந்தியாவில்தான் தயாராகிறது. உலகிலேயே இந்தியாவில்தான் தீப்பெட்டியின் விலை மலிவு.


உலகில் அதிகமாக விற்பனையாகும் பொருட்கள் தலைவலி மாத்திரையும், தீப்பெட்டியும்தான்!



அழும்போது மட்டுமல்லாமல் அதிகமாகச் சிரிக்கும் போதும் கண்களில் கண்ணீர் வரும்! அழும்போது வரும் கண்ணீர் சூடாகவும், சிரிக்கும்போது வரும் கண்ணீர் குளிர்ச்சியாகவும் இருக்கும்! பிறந்த மூன்று மாதங்கள் வரை அழுதால் குழந்தைகளின் கண்களில் கண்ணீர் வராது.

— பி. சுசீலா,
ஏரிப்பாளையம்


நியூகினியாவில் காணப்படும் வண்ணத்துப் பூச்சிதான் உலகிலேயே மிகப் பெரியது. இதற்கு ராணி அலெக்




சாண்டிரியா என்று பெயர். சிறகின் நீளம் மட்டும் 25 செ.மீ. உலகில் மிகச் சிறிய வண்ணத்துப்பூச்சி பெரிபிடியம் என்னும் இனத்தைச் சார்ந்ததாகும். இதன் சிறகு நீளம் 0.5 மி.மி மட்டுமே.

— நெ. இராமன், சென்னை.


ஆங்கிலேயர்கள் முதன்முதலில் இந்தியாவிற்கு வந்தபோது, பனியாக்கள் என்று அழைக்கப்பட்ட இந்திய வணிக சமூகத்தினர் ஆல மரத்தின் அடியில் தங்கி வழிபடுவதையும், வாணிபம் செய்வதையும் கண்டு, வியாபாரிகளை 'பனியா' என்று அழைத்தனர். அதுவே பின்னாளில் மருவி ஆலமரத்திற்கு 'பானியன் ட்ரீ' என்று பெயர் வந்துவிட்டது. ஆலமரத்தை ஹிந்தியில் 'பார்' என்று அழைக்கிறார்கள்.





பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது, ஒரு பெண் குழந்தை பெற்றெடுத்தால், அக் குழந்தை தன் வாழ்நாள் முழுவதும் அந்நாட்டு பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம். இது சைனாவில்தான்!

- எம். வினோத், சங்கரன்கோவில்



உலகிலேயே மிகப் பெரிய ஐஸ்புரூட் பார்த்திருக்கிறீர்களா?

ஸ்வீடன் நாட்டில் அப வின்னர் என்ற நிறுவனம் அதைத் தயாரித்துள்ளது.

அந்த ஐஸ் புரூட்டின் நீளம் 10 அடி. 431 லிட்டர் பாலில் செய்யப்பட்ட அது 240 கிலோ எடை இருந்தது.

வெனிலா சுவை கொண்ட அந்த ஐஸ்புரூட்டை கனமான நீண்ட மரக்குச்சியில் பொருத்திச் செய்தனர். 3000 பேர் அதைச் சாப்பிட்டனர்!

- ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

கடல் பஞ்சு தாவர இனத்தைச் சேர்ந்தது அல்ல. அது பிராணி இனத்தைச் சேர்ந்தது. விஞ்ஞானிகளும் பல வருடங்களாக அது தாவர இனத்தைச் சேர்ந்தது என்று தான் கருதி வந்தார்கள். பல வருடங்களுக்குப் பிறகே அது பிராணி இனத்தைச் சேர்ந்தது என்று கண்டறியப்பட்டது. நாம் குளிப்பதற்கு உபயோகப்படுத்தும் கடல் பஞ்சு அந்தப் பிராணியின் எலும்புக்கூடு தான்.

கடல் பஞ்சு ஒருவகை பிராணியாக இருந்தும், அது பிராணியைப் போல் நகருவதில்லை.



தாவரத்தைப் போலவே அது கடலில், ஒரே இடத்தில் நிலைத்து நிற்கிறது. கடல் பஞ்சு, கடலில் பல உருவங்களில் வளர்கிறது.

கடல் பஞ்சின் உடலில், நுண் துளைகள் உள்ளன. நுண் துளைகளின் வழியே நீரை உறிஞ்சி வடிகட்டி, அதிலுள்ள உணவை உண்டு வாழ்கிறது. பெரிய துளைகளின் வழியே நீரை வெளியேற்றி விடுகிறது.

சில வகை கடல் பஞ்சுகள் முட்டையிட்டு இனவிருத்தி செய்கின்றன. வேறு சில வகை கடல் பஞ்சுகள் அவற்றின் தளிர்கள், கிளைகள் மூலம் பரவுகின்றன.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

சில அறிவியல் உண்மைகள்

ஊசியால் குத்தப்பட்டால் அந்த வலியை உணர மனிதனுக்கு 0.02 வினாடிகளாகின்றன.

ஒளி நிலவிலிருந்து நிலத்திற்கு வர 1.25 வினாடிகளாகின்றன.


மனிதன் மிக நீண்ட கனவு காண எடுத்துக் கொள்ளும் நேரம் 45 நிமிடங்கள்.

ஒரு சிறுத்தை, தன் இரையைப் பிடிக்க 100 கிலோமீட்டர்களை ஒரு மணி பத்து நிமிடங்களில் கடக்கின்றது.

- எஸ். திவ்யஸ்ரீ, ஏழாம் வகுப்பு,
ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வந்தவாசி.

கூடு விழுந்தது ஏன்?

கதை: சச்சின் சக்திவேல்
படம்: மகேஸ்




ஐயோ, நீ தும்மல் போட்டு என் கூடு கீழே விழுந்து, முட்டையெல்லாம் உடைஞ்சு போயிருச்சு.
தும்மல் போட்டதால் கூடு விழுமா? காற்று பலமா வீசுச்சே!
இல்லை, நீ போட்ட தும்மலில்தான் கூடு விழுந்தது. கழுகாரிடம் புகார் செய்யப் போறேன்.
புத்தி இருந்தால் இப்படி பேச மாட்டே.
கழுகார் இருவரின் வாதங்களையும் கேட்டார்.
சரி, நாளை தீர்ப்பு சொல்றேன்.
மறுநாள் சபை கூடியது.
சேவல் ஓடி விட்டதுன்னு நினைக்கிறேன். இன்னும் காணோமே!
அதோ வந்தாச்சு!


சேவலே, ஏன் உன் குஞ்சுகளின் கால்களில் கட்டுப் போட்டிருக்கே?
நேற்று நாங்கள் இரை தேடிக் கொண்டிருந்தோம். அப்போது பஞ்சவர்ணக்கிளி மேலே பறந்து போனது.
அதனால் என்ன?
அதோட நிழல் குஞ்சுகள் மேல் பட்டுக் கால் உடைந்து விட்டது. அதான் கட்டுப் போட்டிருக்கேன்.
இது அநியாயம். எங்காவது நிழல் பட்டுக் காயம் ஏற்படுமா?
தும்மல் போட்டு, கூடு கீழே விழும்போது நிழல் பட்டுக் காயம் ஏற்படாதா?
என்னை மன்னித்து விடுங்கள்.
வீணாக வம்பு செய்ததற்கு அபராதம் கட்டு.
சேவல் மகிழ்ச்சியுடன் சென்றது.

போட்டி

1000/- ரூபாய் பரிசு!




பள்ளி மாணவ, மாணவியருக்காக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். உங்கள் படிப்புக்குத் தேவையான பொருட்களை இதில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.03.2003.

இந்த மாதப் போட்டி

பொருத்துக :

1. பல்லவர்கள் - சங்கரர்
2. சந்தனமரம் - கம்பர்
3. அத்வைதம் - ஒட்டுண்ணித் தாவரம்
4. சடகோபரந்தாதி - தீவு
5. சிங்கப்பூர் - சாரணர் இயக்கம்
6. பேடன் பவல் பிரபு - ரிஷபக் கொடி
7. கடலுக்குள் செல்லும் இவளுக்கு லட்சம் கண்கள் - அவள் யார்?
8. மேலே உள்ள படத்தில் இருக்கும் பிராணியின் பெயர் என்ன?



கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.

பாலருக்குப் பாதை காட்டியவர்



"கனவு காணுங்கள்!"

வளர்ச்சியடைந்த நகரங்களை விட்டுத் தொலை தூரம் கிராமப் புறங்களில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு ஒரு வித தாழ்வு மனப்பான்மை இருப்பதற்கான வாய்ப்பு உண்டு. நகரங்களில் படிக்கும் மாணவ, மாணவியர் படிப்பு மற்றும் வேறு பல உலகளாவிய விவகாரங்களில் மிகச் சமீபத்திய முன்னேற்றங்கள் வரை தெரிந்து கொள்வதற்கான வசதி உண்டு. இது தவிர பெரும்பாலான நகர்ப்புற பெற்றோர்கள் படித்தவர்கள். இந்த நிலையில் 'கிராமப்புற மாணவ, மாணவியர், நகர்ப்புற மாணவ, மாணவியரோடு நாம் போட்டியிட்டு முன்னணிக்குப் போக முடியுமா?' என்று பிரமித்து தடுமாறுவதுண்டு. அப்படியெல்லாம் தடுமாற வேண்டிய அவசியமே இல்லை. கல்வியறிவு பெற வாய்ப்பில்லாத பெற்றோருக்குப் பிறந்து, கிராமப்புற பள்ளியில் படித்திருந்தாலும், ஆசிரியர்கள் காட்டும் ஊக்கம் மற்றும் உற்சாகம் நம்மை மிக உயரத்துக்குக் கொண்டு செல்லும் என்பதற்கு நல்ல உதாரணமாக நமக்குக் காட்சியளித்துக் கொண்டிருப்பவர் நமது குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம். மாணவ, மாணவியர் அவரது வாழ்க்கையைப் பாடமாக எடுத்துக் கொண்டால் முன்னேற்றம் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்.

அப்துல் கலாம் அவர்களின் துவக்கக் கல்வி ராமேஸ்வரம் தீவில். பின்னர் ராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தார். அவருக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் கலாமின் பிஞ்சு மனதில் பெரிய கனவை விதைத்தார்கள். உதாரணமாக கலாமின் வகுப்பாசிரியர் ரெவரெண்ட் ஐயா துரை சாலமன். 'திடமான நம்பிக்கை மூலம் விதியைப் புரட்டிப் போட முடியும்' என்று மனதில் பதிய வைத்தவர் அவர். 'அவரது அந்த அறிவுரை வாழ்க்கை முழுவதும் வழி காட்டி வந்திருக்கிறது' என்று பெருமையுடன் சொல்வார் கலாம். இந்த நாட்டுச் சிறுவர் சிறுமியருக்குக் கலாம் சொல்லும் செய்தியும் அதுவே. கலாமைச் செழுமைப்படுத்திய மற்றொருவர் விஞ்ஞான ஆசிரியரான சிவசுப்பிரமணிய அய்யர்.

"காலத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளை மாற்ற வேண்டுமானால், போராடித்தான் ஆக வேண்டும்" என்று வலியுறுத்திச் சொல்லுவார் விஞ்ஞான ஆசிரியர். அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை அடிக்கடி கலாம் அவர்கள் குறிப்பிடுவதுண்டு. விஞ்ஞான ஆசிரியர் முற்போக்கு கருத்துகளுக்குச் சொந்தமானவர். ஆனால் ஆசிரியரின் மனைவியோ மிகவும்




ஆசார வாழ்க்கையை அனுசரிப்பவர். பல்வேறு சமூகத்திலிருந்து வரும் சிறுவர்களை ஒன்றாகப் பழக வைத்து அவர்களிடமிருந்த இடைவெளிகளைக் குறைப்பார் ஆசிரியர்.

"ஒருமுறை விஞ்ஞான ஆசிரியர் என்னை அவரது வீட்டிற்குச் சாப்பிட அழைத்திருந்தார். ஒரு முஸ்லிம் சிறுவனை ஆசாரமான பிராமணர் வீட்டில் சாப்பிடக் கூப்பிடுவதா என்று அவரது மனைவிக்குக் கோபம் வந்து விட்டது. ஆனால் எனது ஆசிரியர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போய், அவரே இலை போட்டுப் பரிமாறி சாப்பிட வைத்தார். இது தவிர பக்கத்தில் அமர்ந்து அவரும் சாப்பிட்டார். அவரது மனைவி சமையலறையின் கதவு பின்னாலிருந்து நாங்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் சாதம் சாப்பிட்ட முறை, நீர் அருந்திய விதம், சாப்பிட்ட பின் தரையைச் சுத்தப்படுத்திய நேர்த்தி ஆகியவற்றை அவரது மனைவி உன்னிப்பாகக் கவனித்திருக்க வேண்டும். நான் ஆசிரியரிடம் சொல்லிவிட்டு வரும் போது அவர், "அடுத்த வாரம் இரவுச் சாப்பாட்டுக்கு வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நான் கொஞ்சம் தயங்குவதைப் பார்த்தவுடன் "கவலைப்பட வேண்டாம்; காலத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளை மாற்ற முடிவு செய்து விட்டால் போராடித்தான் ஆக வேண்டும்" என்று உறுதியான குரலில் சொன்னார்.

"அடுத்த வாரம் மீண்டும் நான் ஆசிரியரது வீட்டிற்குச் சென்றேன். என்ன ஆச்சர்யம்! ஆசிரியரது மனைவியே என்னை வரவேற்று, அமர வைத்து, இலை போட்டுப் பரிமாறினார். ஆசிரியருக்குச் சந்தோஷம். அவரது உறுதியான அணுகுமுறை ஒரு மன மாற்றத்துக்கு வழி வகுத்து விட்டதே! 'ஒரு சிறிய தீவில் படிப்பை மேற் கொண்டாலும், பெரிய வளர்ச்சியடைந்த நகரங்களில் உள்ள மெத்தப் படித்தவர்களுக்குச் சமமாக உன்னைக் காண விரும்புகிறேன்' என்று அடிக்கடிச் சொல்லுவார் எனது விஞ்ஞான ஆசிரியர். அவரை நினைக்கையில் என் கண்கள் பனித்துப் போகின்றன."

இப்படி கலாம் வாழ்க்கைக்கு உறுதியான அடித்தளம் போட்ட ஆசிரியர்கள் ஒரு பக்கம் இருக்க, மகத்தான மனிதர்களுக்கிடையிலும் அவரது இளமைப் பருவம் பின்னிக் கிடந்தது. அப்படிப்பட்ட மகத்தான மனிதர்களில் ஒருவர் ராமேஸ்வரம் கோயிலின் தலைமை குருக்கள் பட்சி லட்சுமண சாஸ்த்திரி. அவரது மகன் பட்சி ராமனாத சாஸ்த்திரி, கலாமின் வகுப்புத் தோழன். பள்ளியில் நண்பர்கள் இருவரும் பக்கம், பக்கமாக அமர்ந்திருப்பார்கள். ஒரு நாள் புதிதாக வந்த ஆசிரியர் ஒருவர், தொப்பி வைத்திருந்த முஸ்லிம் சிறுவனும், ஆசாரமான பிராமண குடும்பத்து பையனும்





வேண்டியது அவசியம்'' என்பது கலாம் வலியுறுத்தும் செய்தி.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக உருவாக்குவது எப்படி? – தான் சந்திக்கும் எதிர்கால தலைமுறையிடம் கலாம் கேட்கும் முக்கிய கேள்வி இதுதான். அவருக்குக் கிடைக்கும் பதில்கள் மிக, மிக வித்தியாசமானவை.

மாணவ, மாணவியரின் புதுமையான, நுட்பம் நிறைந்த பதில்கள் கலாமை வியக்க வைக்கின்றன.

"கணக்கற்ற மலர்கள் தொகுக்கப்பட்டு ஒரு மாலையாக மாறுவது போல இந்தியாவில் உள்ள அனைவரின் மனங்களையும் ஒருமைப்படுத்தினால் நாடு வளர்ச்சிப் பாதையில் சிறகடிக்கும்'' என்றார் ஒரு மாணவி.

"அண்ட வெளியில் அலைந்து திரியும் மின்னணு போன்றவள் நான். அந்த மின்னணு தொடர்ந்து தொய்வில்லாமல் பயணம் மேற்கொள்வதைப் போல நானும் உழைப்பேன்'' என்றார் மற்றொரு மாணவி.

"மற்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதார மற்றும் தொழில் நுட்பத் தடைகளை இந்தியா எதிர்த்து நிற்கும் போதுதான் ஒவ்வொரு இந்தியனும் நாட்டைப் பற்றி பெருமிதப்பட்டுக் கொள்ளும் நிலை உருவாகும்'' என்றார் ஒரு மாணவர்.

கலாமின் இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன? உங்கள் எண்ணங்களைச் சுருக்கமாக நமது குடியரசு தலைவருக்குத் தெரிவிக்கலாமே!

உங்கள் கருத்துகளைக் கோகுலத்துக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துகள் கோகுலத்தில் பிரசுரமாகும். குடியரசுத் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

ஒன்றாக அமர்ந்திருப்பதைப் பார்க்கச் சகிக்காமல் கலாமைப் பின்புற பெஞ்சுக்கு மாற்றி விட்டார். அன்றைக்கிருந்த சமூகச் சூழல் அப்படி. ஆனால் அதைக் கேள்விப் பட்ட நண்பரின் தந்தை பட்சி லட்சுமண சாஸ்த்திரி, நண்பர்களைப் பிரித்த ஆசிரியரைக் கூப்பிட்டு, "சிறுவர்களின் மனதில் நஞ்சைத் தூவ வேண்டாம்'' என்று ஒரு பிடி பிடித்தார். அதற்குப் பின்னர் அந்த ஆசிரியரின் சமூகக் கண்ணோட்டம் மாறியது என்பது குறிப்பிடத்தக்கது.

நாடு முழுக்க சென்று லட்சக் கணக்கான மாணவ, மாணவியரைச் சந்தித்து வருகிறார் கலாம். அவர்களுக்கு கலாம் சொல்லும் அறிவுரை, "கேள்வி கேளுங்கள், கனவு காணுங்கள்'' என்பதுதான். "கேள்விகள் புதிய சிந்தனைகளுக்கு ஊற்றாக அமையும். தெளிவைக் கொண்டு வரும். கனவுகள் உங்கள் உள்ளுணர்வில் கலந்து செயல்களாக மலரும். அந்தச் செயல்கள் கடின உழைப்புடன் கைகோர்க்கும்போது, சாதனைகள் சாத்தியமாகும். ஆசிரியர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் என்றும் ஓய்வு கிடையாது'' என்பார் கலாம். "நாடு வளர்ச்சியடைவதற்கும், வளர்ச்சித் தன்மையைப் பாதுகாப்பதற்கும் இந்த இரு பிரிவினரும் என்றும் விழிப்புடன் இருக்க

– ப்ரியன்

ஓவியப் போட்டி

ஆஸ்ட்ரிச் எனப்படும் 'நெருப்புக் கோழி'களைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: வேகமாக ஓடும் நெருப்புக் கோழிதான்! ஓவியம் வண்ணத்திலிருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. மறவாமல் உங்கள் முகவரியைக் குறிப்பிடவும். கடைசி தேதி: 8.3.2003

என். மாதவன்



காணாமல் போன கதிரவன்!

நடுநிசி நேரம். உதயகிரி நாட்டின் மந்திரி கபர்தார் நன்கு தூங்கிக் கொண்டிருந்தார். கதவைத் தட்டினர் காவலர்கள். கண் விழித்தவர், "என்ன காவலர்களே விசேஷம்? நடுநிசியில் நித்திரபங்கம் செய்கிறீர் கள்?" என்றார்.

"ஐயா, அங்கே ராஜாவின் மானமே பங்கமாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் உங்கள் நித்திரை பங்கமாகி விட்டது எனப் புலம்புகிறீர்களே..." என்றனர் காவலர்கள்.

மந்திரி புறப்பட்டுச் சென்றார்.

மன்னர் உலவிக் கொண்டிருந்தார். மந்திரி வந்ததும் உற்சாகமடைந் தார். "மன்னிக்க வேண்டும் கபர்தார். பக்கத்து நாட்டு அரசர் நமது நாட்டின் வழியே போகும் கீழை ஆற்றில் அணையைக் கட்டி விட்டாரல் லவா?"

"ஆமாம். அது பழைய தகவல். நாம் கூட, போகட்டும் நமது நாட்டில் தான் நீர்வளம், நிலவளம், புஜபலம் எல்லாம் இருக்கிறதே என விட்டு விட்டோமே."

"நாம் அப்படி செய்ததுதான் தவறு. அவர்கள் தங்களது அணையை இழுத்து மூடிவிட்டார்கள். இனிமேல் நமக்குத் தண்ணீர் விடமாட்டார் களாம்."

"நல்லது மன்னா. அவர்களது அணையை ஒருபோதும் திறக்கக் கூடாது. தண்ணீர் நிரம்பி விட்டால் அந்தத் தண்ணீரை நமது நாட்டுப் பக்கம் அனுப்பக் கூடாது என்போம். அந்த நாடே அணைத் தேக்க வெள்ளத்தில் மூழ்கி மடியும். நீங்களும் வீரப்பா ஸ்டைலில் மடியட்டும் மன்னவன்! மங்கட்டும் அவன் புகழ் எனலாம்!"

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
5. Name of Editor	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No.14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2003

K. Rajendran
Publisher

"ஏற்கெனவே பருவமழை டாடா காட்டி வருகிறது. இதே நிலை நீடித்தால் நமது நாட்டின் ஏரி, குளங்கள் வற்றி எங்கெங்கு காணினும் பஞ்சமே மிஞ்சும்."

"மன்னா, மகத்தான பிரச்னையைச் சமாளிக்க உள்ளீர்கள். இந்தப் பிரச்னையை மட்டும் நீங்கள் தீர்த்து விட்டால் உங்களுக்கு 'அணையை உடைத்த அசகாயர்' என்ற பட்டம் கொடுக்க நமது ஜால்ரா வித்வான்களிடம் சொல்லி விடலாம்."

"மந்திரி உமக்கு எப்போதும் விளையாட்டுதான். நீர் உடனடியாகச் சந்திரகிரிக்குச் சென்று ஏதாவது செய்யும்."

மந்திரி விழித்தார்.

"கவலை வேண்டாம் மந்திரி. அரேபிய உடைகளும், ஒப்பனைப் பொருட்களும் உள்ளன, அவற்றைத் தருகிறேன். நீர் ஏதாவது தந்திரம் செய்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்."

வழிநெடுக குதிரையில் பிரயாணம் செய்த கபர்தார், பக்கத்து நாட்டை அடைந்தார்.

"சென்ட் வாங்கலியோ சென்ட்" என நகரத்துக்குள் நுழைந்தார்.

மக்களும் வந்து அவரிடம் விலை பேசத் துவங்கினர். "என்னப்பா சென்ட்டோட விலை?"

"ஏதோ கொடுக்கிறதைக் கொடுங்க" எனச் சொல்லி, விற்றுக் கொண்டே 'சந்திரகிரியின்' மந்திரி வீட்டை அடைந்தார்.

மந்திரியின் பெயர் அசோந்திரன். சென்ட் வியாபாரியான கபர்தாரைக் கண்டதும், "யாருப்பா நீ? என்கிட்ட சென்ட் விக்க வந்துட்டே. போ போ" என விரட்டினார்.


"மந்திரி அசோந்திரனுக்கு உதயகிரி மந்திரி கபர்தாரின் வணக்கம். நாம் இருவரும் கடந்த வருடம் 'சித்திரா பௌர்ணமி' விருந்தில் சந்தித்தோமே, நினைவில்லையா?" என்றார்.

"ஆம். நினைவிருக்கிறது. நம் இரு நாட்டிற்கும்தான் எக்கச்சக்க பிரச்னை உள்ளதே. இந்த நேரத்தில் ஏன் வந்தீர்? யாராவது பார்த்தால் என் தலை உடலில் இருக்காது. தெரியாதா உமக்கு?" சீறினார் அசோந்திரன்.

அசோந்திரனைச் சமாதானப்படுத்திய கபர்தார், இரகசியமாக ஏதோ பேசினார். சந்திரகிரி நாட்டிலேயே மந்திரி கபர்தார் அன்று இரவு தங்கினார். அந்நாட்டின் வழக்கப்படி இரவில் மணிக்கொரு முறை மணியடிக்கப்பட்டது. விடியற்காலை 2,3,4,5 என மணியடிக்கப்பட்டு ஆறாவது மணிக்கான மணியும் அடிக்கப்பட்டது. பொழுது விடியவில்லை. கதிரவனும் உதிக்கவில்லை.

மக்கள் அனைவரும் மன்னனை நோக்கி

ஓடி வந்தனர். ஆளாளுக்குக் கூச்சலிட்டனர். வெளியே வந்த சந்திரகிரி மன்னர் மந்திரியைப் பார்த்தார்.



மந்திரி விழித்தார்.

மந்திரி மன்னரிடம் பேசத்துவங்கினார்: "மன்னா, நீங்கள் உங்கள் சௌகரியத்துக்காக உதயகிரிக்குச் செல்லும் கீழை நதியின் குறுக்கே அணை கட்டினீர்கள்."

"என்ன அபாண்டம்! என் சௌகரியத்திற்கு கட்டினேனா? மக்கள் சௌகரியத்துக்காகத்தானே கட்டினேன்" — பதறினார் மன்னர்.

"போதும் மன்னா. நாம் எதிரிநாட்டின் மீது படையெடுத்துத் தோல்வியடைந்தோம். அதை மறைக்க, அணையைக்கட்டி நமது ஜால்ராக்களை வைத்து 'அணை கட்டிய அசகாயர்' என பட்டம் வேறு வாங்கிக் கொண்டீர்கள்!"

"அதற்கு என்ன?" சீறினார் மன்னர்.

"மன்னா, நமது நாட்டிலிருந்து போகும் ஆற்றின் குறுக்கே அணையைக் கட்டிவிட்டீர்கள் அல்லவா? அதனால் உதயகிரி மன்னர் அவரது நாட்டைக் கடந்து வர வேண்டிய கதிரவனைக் கைப் பற்றி வைத்துள்ளார்."

"ஓ... அப்படியா சங்கதி. மக்கள் கோபமாய் உள்ளனரே. ஏதாவது செய்து நாட்டைக் காப்பாற்றக் கூடாதா?"

"நமது அணையிலிருந்து முறைப்படி உதயகிரிக்குச் சேர வேண்டிய தண்ணீரை விடுவிப்போம். அவர்களும் கதிரவனை விட்டு விடுவார்கள்."

"யாரங்கே? உடனடியாக உதயகிரிக்குச் சேர வேண்டிய தண்ணீரைத் திறந்து விடு" என்றார்.

தண்ணீர் திறந்து விடவும், சூரியன் உதிக்கவும் சரியாய் இருந்தது. மந்திரி கபர்தார், அசோந்திரனுக்கு நன்றி தெரிவித்தார். தனது திட்டப்படி 6 மணிக்கான மணியை 4 மணிக்கே அடித்த நேரக் காப்பாளருக்கும், மக்களைத் திரட்டிய ஒரு சில சமூக சேவகர்களுக்கும் நன்றி தெரிவித்து விட்டுத் தமது நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

செய்தித் துளிகள்

செய்தித் துளிகள்

கவனம் தேவை!

நீண்ட நேரம் கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்து பணியாற்றுவோருக்கு ரத்தம் உறைந்து கட்டியாகிவிடும் ஆபத்து உள்ளதாக மருத்துவ ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். தினமும் 18 மணி நேரம் கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்து பணியாற்றுகிறவர்களுக்கு இந்த ஆபத்து வரலாம். நியூசிலாந்து மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் ரிச்சர்ட் பீஸ்லி மற்றும் அவரது ஆய்வுக் குழுவினர் இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

இசைக்குத் தடை

ஈரான் நாட்டில் பொது இடங்களில் யாரும் இசையை ஒலிபரப்பக் கூடாது. கார்களில் உள்ள டேப் ரெக்கார்டர்களில் கூட இசையைக் கேட்கக் கூடாது என்று அந்நாட்டு போலீஸ் தெரிவித்துள்ளது. 1979 ஆம் ஆண்டு ஈரானில் இஸ்லாமியப் புரட்சி நடந்தது. அப்போது சாஸ்த்ரிய இசை, மத வழிபாட்டு இசை தவிர ஏனைய இசை அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டது. இப்போது அங்கீகரிக்கப்பட்ட இசையைக் கூட பொது இடங்களிலும், கார் ஓட்டும் போதும் கேட்கக் கூடாது என்று கூறியுள்ளனர்.

அழிவு...

பூமியின் வாழ்வும் சாவும் என்ற நூலில் 'உலகின் அழிவு தொடங்கிவிட்டது; எனினும் பூமி முழுமையாக அழிய இன்னும் 750 கோடி ஆண்டுகள் இருக்கின்றன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப் புத்தகத்தை விண்வெளி இயற்பியல் விஞ்ஞானிகள் டொனால்ட் பிரவுன்லீ, பீட்டர் வார்டு ஆகியோர் எழுதியுள்ளனர். பூமிக்கு 1200 கோடி வயதாகும்போது (பூமியின் தற்போதைய வயது 450 கோடி ஆண்டுகள்) சூரியன் மிகப் பிரமாண்டமாக விரிவடைந்து பூமியை விழுங்கிவிடும். பூமியானது தூள் தூளாகி அனைத்து மூலக்கூறுகளும் அணுக்களும் தூசியாகி விண்வெளியில் பறக்கும் என்று எழுதியுள்ளனர். இந்த அற்புதமான பூமியைக் காப்பாற்ற சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

விருது

உலகப் புகழ் பெற்ற இந்திய எழுத்தாளர் அருந்ததிராய். அவருக்கு அமெரிக்காவைச் சேர்ந்த 'லெனான் ஃபவுண்டேஷன்' என்ற அமைப்பின் 'கலாசார விடுதலை விருது' வழங்கப்பட உள்ளது. ரொக்கப் பரிசாக ரூ. 1 கோடியே 75 லட்சம் வழங்கப்படுகிறது. தமக்கு வழங்கப்பட உள்ள பரிசுத் தொகை இந்தியாவில் உள்ள மக்கள் இயக்கங்கள், பதிப்பகங்கள், கல்வி நிறுவனங்கள், நாடகக் குழுக்கள் உட்பட 50 பேருக்குப் பிரித்து அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளார் அருந்ததிராய்.



• கல்பனா சாவ்லா


சோகம்!

விண்வெளி ஆராய்ச்சிக்காக அமெரிக்கா 'கொலம்பியா' என்ற விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பியது. கொலம்பியா பூமிக்குத் திரும்பும்போது பிப்ரவரி 1ந் தேதி நடுவானில் வெடித்துச் சிதறியது. அதில் இருந்த 7 விண்வெளி வீரர்களும் பலி ஆனார்கள். இதில் இந்தியாவைச் சேர்ந்த கல்பனா சாவ்லாவும் ஒருவர். இந்தியா செப்டெம்பரில் அனுப்பிய 'மெட்சாட்' செயற்கைக் கோள் இனிமேல் கல்பனாவின் நினைவாக 'கல்பனா-1' என்று அழைக்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

உலகக் கோப்பை கிரிக்கெட்



• ஹூப்பர்



• கங்குலி



• ஸ்டீவ் வாஹ்

விளையாட்டு உலகம்

பல கோடி மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் வந்துவிட்டன. பிப்ரவரி ஒன்பதாம் தேதி துவக்க விழா, பிப்ரவரி பத்தாம் தேதியிலிருந்து மார்ச் 23ந்தேதி வரை இப்போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் ஆஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, ஜிம்பாப்வே, பாகிஸ்தான், ஹாலந்து, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, கென்யா, மேற்கு இந்தியத் தீவுகள், வங்கதேசம், நியூசிலாந்து, கனடா, நமீபியா ஆகிய பதினான்கு நாடுகள் பங்கேற்கின்றன.

1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் மேற்கு இந்தியத் தீவுகள் 1975, 1979 என இரண்டு முறை தொடர்ந்து கோப்பையை வென்றது. 1987, 1999 ஆஸ்திரேலியாவும் இருமுறை வென்றது. 1983 - இந்தியா, 1987 - ஆஸ்திரேலியா, 1992 பாகிஸ்தான், 1996 - இலங்கையும் வென்றுள்ளன.

கேப்டன்	நாடுகள்
1. சவுரவ் கங்குலி	இந்தியா
2. நாசர் ஹுசைன்	இங்கிலாந்து
3. வக்கார் யூனிஸ்	பாகிஸ்தான்
4. ஹூப்பர்	மேற்கு இந்தியத் தீவுகள்
5. ஃபிளமிங்	நியூசிலாந்து
6. காலித் மசூத்	வங்கதேசம்
7. ஸ்டீவ் டிகோலா	கென்யா
8. ரிக்கி பாண்டிங்	ஆஸ்திரேலியா
9. சனத் ஜெயசூர்யா	இலங்கை
10. ஹீத் ஸ்ட்ரீக்	ஜிம்பாப்வே
11. ரொனால்டு	நெதர்லாந்து
12. டியான் கோட்ஸ்	நமீபியா
13. ஜோசப் ஹாரிஸ்	கனடா
14. ஷான் பொல்லாக்	தென் ஆப்பிரிக்கா

இந்த உலகக் கோப்பையில் சில வீரர்களின் மேல் ஒட்டுமொத்த கவனமும் திரும்பியிருக்கிறது. வீரேந்தர் ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், சயீத் அன்வர், ஆடம் கில்கிறிஸ்ட், சனத் ஜெய சூர்யா, கிப்ஸ், ஷான் பொல்லாக், மாத்யூ ஹெய்டன், சோயப் அக்தர், ஷேன் வார்ன், ஷேன் பாண்ட், ஜாஹிர்கான், முரளிதரன், ஹர்பஜன் சிங், பிரேக்ஸ் ஆகியோர் பிரகாசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உலகக் கோப்பையை வெல்லப் போவது சொந்த மண்ணில் விளையாடும் தென் ஆப்பிரிக்காவா, சென்றமுறை கோப்பையை வென்ற ஆஸ்திரேலியாவா அல்லது வேறு ஏதாவது ஒரு நாடு இன்ப அதிர்ச்சி கொடுக்கப் போகிறதா?

ஆஸ்திரேலிய அணியின் சிறந்த வீரர்களில் ஒருவரான மாத்யூ ஹெய்டன், தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டன் ஷான் பொல்லாக் ஆகியோரின் போஸ்டர் *40ஆம் பக்கத்தில்.*

பரிசளித்த மீனாட்சி!

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையை ஆட்சி செய்தவர் திருமலை நாயக்கர். மதுரை மீனாட்சி சுந்தரர் திருக்கோயிலில் நாயக்கர் முன்னிலையில் குமரகுருபர சுவாமிகள் தாம் இயற்றிய பிள்ளைத் தமிழைப் பாடினார்.



ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவமாகப் பாடினார். ஆறாவது நாள் வருகைப் பருவத்தைப் பாடும்போது சந்நிதிக்குள்ளிருந்து புறப்பட்டு தெய்வீகப் பெண் குழந்தை ஒன்று வெளியில் வந்தது. நேராக நாயக்கரின் மடியில் போய் அமர்ந்து கொண்டு பாடல்களைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தது. குமரகுருபரர் வருகைப் பருவத்தின் சிறந்த பாடலான

"தொடுக்குங் கடவுட்
பழம் பாடற்
தொடையின் பயனே
நறை பழுத்த துறைத்
தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை
யகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்
கோயிற் கேற்றும் விளக்கே
வளர்ச்சிமய இமயப் பொருப்பில்
விளையாடு மிள மென் பிடியே."

என்று மனமுருகிப் பாடினார். அப்போது அந்தப் பெண் குழந்தை நாயக்கர் கழுத்தில் இருந்த விலை மதிப்பு மிக்க மாலையைக் கழற்றியது. நேராக வந்து குமரகுருபரரின் கழுத்தில் போட்டுப் புன்னகை செய்தது.

'யாருடைய குழந்தை?' என அனைவரும் யோசித்துக் கொண்டிருக்கும்போதே சந்நிதிக்குள் சென்று குழந்தை மறைந்தது.

தனது வருகைப் பருவம் கேட்க மீனாட்சியே குழந்தையாக வந்திருந்த உண்மை எல்லோருக்கும் புரிந்தது. இத்தகைய அருமையான காட்சியைத்தான் அட்டையில் காண்கிறீர்கள்.

அட்டை ஓவியம் : **ஸ்யாம்**

திண்டுக்கல் மாவட்டச் சிறப்பிதழ்

திண்டுக்கல் மாவட்டச் சிறப்பிதழுக்குப் படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. ஏப்ரல் கோகுலம் திண்டுக்கல் மாவட்டச் சிறப்பிதழாக மலர இருக்கிறது. அனுப்ப நினைப்பவர்கள் உடனே உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்து திருச்சி மாவட்டச் சிறப்பிதழ்

திருச்சி மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர் இப்பொழுதே தங்களின் படைப்புகளை அனுப்ப ஆரம்பிக்கலாம். கதைகள், கவிதைகள், துணுக்குகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்களை எழுதி அனுப்பலாம். இது தவிர திருச்சி மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசி தேதி 15.3.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. மாதவியின் மகள் (5)

5. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு ______ (3)

10. கொடியில் காய்க்கும் கசப்புச் சுவையுடைய காய் (3)

13. இளம் பெண் (3)

வலமிருந்து இடம்

2. துளிர்க்கும் இலை (3)

4. கிழமைகளில் ஒன்று (3)

9. ரம்பம் (3)

14. போட்டிகளில் வெற்றி பெற்றால் இது கிடைக்கும் (5)

மேலிருந்து கீழ்

1. மாலையில் மலரும் மணம் மிக்க மலர் (4)

2. ஆபத்து காலங்களில் பாதிக்கப்பட்டவர்க்குத் தங்க இடம் கொடுத்து உதவி செய்வது (4)

3. சிற்பம் செதுக்க இது அவசியம் (2)

6. வாகனங்களின் வேகத்தைக் குறைக்க வேகத் ______ உள்ளது (2)

9. கோடீஸ்வரர் பல கோடிகளுக்கு ______ (4)

10. வயல்களுக்கு நீர் பாய்ச்சும் முறை (4)

கீழிருந்து மேல்

4. கும்பகோணம் ______க்குப் புகழ் பெற்றது (4)

5. விசேஷங்களின்போது இதைத் தெளித்து வரவேற்பர் (4)

7. வீரர்களின் உறையில் இது இருககும் (2)

8. அழகி (2)

11. ஆடல், பாடல் என்பது ______ (2)

12. அர்ஜுனன் இந்த வித்தையில் சிறந்தவன் (2)

13. போர் (4)

14. ______ இல்லாமல் கல்யாணமா? (4)

- எஸ். திவ்யா, ஒன்பதாம் வகுப்பு, ஏ.ஆர்.சி. காமாட்சி மெட்ரிகுலேஷன் பள்ளி, சித்தர்காடு, மயிலாடுதுறை

விடை 64 ஆம் பக்கம்



I 1) உடைத்து திறந்த பெட்டியை மூடி வைக்க முடியாது! - அது என்ன?

2) பட்டினி கிடந்தாலும் பருத்த வயிறு குறையாது! - அது என்ன?

3) ஒட்டாத உறவு, உறுதி இல்லாத வாழ்வு,பகட்டுடன் இருந்தாலும் பந்தமாக முடியாது! அது என்ன?

4) பூமிக்குள் பிறந்த பிள்ளை; பூலோகமே மதிக்கும் பிள்ளை! - அவன் யார்?

- ப. யோகநாதன்,
கிழக்கு தாம்பரம்.

II 1) மூன்று கண் இருக்கும் - சிவனும் அல்ல; குடுமி இருக்கும், பெண்ணும் அல்ல; தண்ணீர் இருக்கும், கிணறும் அல்ல - அது என்ன?

2) குண்டு பாப்பா குழியில் விழுந்தாள் - அது என்ன?

3) அறிவைக் கொடுக்கும், ஆசானும் அல்ல; பள்ளியில் இருக்கும் கரும்பலகையும் அல்ல. - அது என்ன?

4) கசப்பான உடம்புக்காரி, உண்டால் மருந்துக்காரி - அவள் யார்?

5) தொட்டால் நம்மை நடுங்க வைக்கும்; சூரியனைக் கண்டால் நடுங்கி உருக்கும் - அது என்ன?

— எஸ். வினுபார்கவி,
அந்தியூர்.

III) 1) இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் - அது என்ன?

2) கண்ணால் பார்க்கும்; கண்டதைப் பதிக்கும்; பதித்ததைக் கொடுக்கும் - அது என்ன?

3) யானை விரும்பும்; சேனை விரும்பும். அடித்தால் வலிக்கும்; கடித்தால் இனிக்கும் - அது என்ன?

- வி. மீனாட்சி,
ஐந்தாம் வகுப்பு,
காமராஜர் மெட்ரிக்குலேசன் பள்ளி,
கோவை.

IV 1) சிறகு மடக்காமல், சின்ன விழி மூடாமல் பறக்கும் பூச்சி - அது என்ன?

2) தண்ணீர் இல்லாத தடாகத்தில் தாவிப் பாயுது ஒரு கப்பல் - அது என்ன?

3) துடு துடு மலையிலே, சுந்தர மடுவிலே, அந்தர தோகை, மந்திரக் கூத்தாடுது - அது என்ன?

4) தண்ணீர் இல்லாமல் வளரும்; தரையெல்லாம் படரும்; வளர்ந்து நெளிந்து ஆடும்; வாசனைப் பூவும் கேட்கும் - அது என்ன?

5) தம்பியின் சோற்றுத் தட்டு; தரைக்கு வராத தட்டு; தேயும், வளரும் தட்டு; திருட முடியாத தட்டு அது என்ன?

6) தூங்கும் அறை தேடுவார்; சங்கீதம் பாடுவார்; ஊசியும் போடுவார் - யார் அது?

- ஆர். ராஜலட்சுமி,
கரூர்.

சொல்லுங்கள் விடை என்ன?



விடைகள்:


I 1) தேங்காய், 2) பானை, 3) ஓட்டு முடி, 4) தங்கம்.

II 1) தேங்காய், 2) பணியாரம், 3) புத்தகம், 4) பாகற்காய், 5) ஐஸ்கட்டி

III) 1) கடிகாரம், 2) கேமரா, 3) கரும்பு

IV) 1) தட்டாம் பூச்சி, 2) ஒட்டகம், 3) மத்து 4) கூந்தல் 5) நிலா 6) கொசு

த. ஜானகி



ஜீவா காப்பாற்றிய சிலை!

ஊருக்கு ஒதுக்குப்புறமாக அந்தக் குளம் இருந்தது. அதில் தண்ணீர் என்றைக்குமே இருக்கும். ஊருக்குள்ளேயே நீர் வசதி இருப்பதால் மக்கள் குளத்திற்கு வந்து நீர் எடுப்பதில்லை. பாதசாரிகள், இரவு சினிமா பார்த்துவிட்டு வருபவர்கள், அந்தக் குளத்தில் இறங்கி நீரைப் பருகிச் செல்வது உண்டு. மீன் பிடிக்க மட்டும் ஆட்கள் வருவார்கள்.

அந்தக் குளத்தில் ரொம்ப நாட்களாக ஒரு மீன் இருந்தது. அதன் பெயர் ஜீவா. குளத்தில் இருக்கும் மீன்களில் ஜீவாதான் மிகப் பெரிய மீன். தோற்றத்தில் மாத்திரம் இல்லை, வயதில் மாத்திரமில்லை, அறிவிலும்கூட அதுதான் சிறந்து விளங்கியது. ஏமாந்து போய் தூண்டிலில் சிக்கிக் கொள்ள இருந்த பல மீன்களை எச்சரித்துக் காப்பாற்றியிருக்கிறது. பொதுவாக மற்ற எல்லா மீன்களுக்கும் ஜீவாவை ரொம்பப் பிடிக்கும்.

மழை பெய்து கொண்டிருந்தது. நள்ளிரவில் அந்தக் குளத்தின் மத்தியில் தண்ணீரைக் கலக்கி வாரி இறைத்தபடி 'சொத்' என்ற சத்தத்துடன் ஏதோ ஒன்று விழும் சத்தம் கேட்டது. அங்கே இருந்த எல்லா வகை மீன்களும் பயந்து போய்விட்டன. அச்சத்தோடு என்ன செய்வது என்று தெரியாது ஓரிடத்தில் நடுங்கியபடி இருந்தன.

''வானத்திலிருந்து சூரியன் விழுந்திருக்குமோ?'' என்றது ஒரு பெரிய மீன். ''இல்லை சந்திரன்தான் விழுந்திருக்கும்'' என்றது இன்னொரு மீன். ''ஏரோப்ளேன் விழுந்துருக்குமோ?'' என்றது வேறொரு மீன். ''பஸ் ஏதாவது ப்ரேக் சரியா பிடிக்காமல் ஓடி விழுந்திருக்குமோ'' என்று படபடத்தது மற்றொரு மீன். அரை மணி நேரம் பயத்திலேயே கரைந்தது. சற்று பயம் குறைந்ததும் அவர்களை நோக்கி அங்கு வந்த ஜீவா, ''நண்பர்களே! பயப்படாதீர்கள். நான் முன்னால் செல்கிறேன். எனக்குப் பின்னாடி நீங்கள் வாருங்கள். குளத்தின் மையப் பகுதியில் என்ன பொருள் விழுந்திருக்கிறது என்று பார்ப்போம்'' என்று கூறியபடி முன்னால் செல்ல, பின்னால் மற்ற

மீன்கள் எல்லாம் சென்றன. குளத்தின் மையப் பகுதியை அடைந்ததும் எல்லா மீன்களும், "ஆ.. இது முருகன் சிலை. நம்ம ஊர் கோவில்லே இருக்கும் சிலையாகத் தான் இருக்கும்" என்று கோரசாகக் கூறின.

சிலையின் அருகில் சென்ற ஜீவா, அதை உற்றுப் பார்த்து விட்டு "நண்பர்களே! நீங்கள் சொல்வது சரிதான். இன்று மாலை குளத்தங்கரை படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சிலிருந்து இன்று இரவு முருகன் சிலையைக் கடத்திச் செல்ல திட்டம் தீட்டியது புரிந்தது. கோவிலிலிருந்து சிலையைத் திருடிக் கொண்டு வந்திருக்காங்க. நல்ல மழையா... காற்று வேறு பயங்கரமா வீசியதா... சாலை நடுவில் பெரிய வேப்ப மரம் விழுந்திடுச்சு. சிலையைத் தூக்கிக்கிட்டுப் போகும் போது, பிடிபட்டா ஆபத்துன்னு நம்ம குளத்துக்குள்ளே தூக்கிப் போட்டு விட்டுப் போயிட்டாங்க. குளத்துக்கு மத்தியிலே சிலை இருக்கிறதாலே ஊர் ஜனங்க கண்களுக்கு இந்தச் சிலை இருப்பது தெரியாது. சிலையை இங்கே போட்டுவிட்டுப் போனவங்க நிச்சயம் இதைக் கடத்திக்கிட்டுப் போக ஒரு நாள் வருவாங்க. அந்தக் கயவர்கள் மறுபடி வருவதற்குள் நாம சிலையைக் காப்பாத்தியாகணும்" என்று கூறி முடித்தது.

"ஜீவா அண்ணே! நீங்க சொல்றது உண்மைதான். எப்படியாவது நம்ம ஊரு தெய்வச் சிலையைக் காப்பாத்தியாகணும். நாம எல்லோரும் சேர்ந்து தூக்கினாக்கூட தூக்க முடியாதே!" என்றது ஒரு பெரிய மீன்.

சிறிது நேரம் சிந்தித்த ஜீவா, "நாம அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையா செயல்பட வேண்டும். முருகன் சிலையில் இருக்கும் பட்டுத் துண்டை வாயினால் கடித்து எடுத்து, மீதிப் பகுதியைக் கடிக்காமல் ஜாக்கிரதையா குளத்தங்கரையின் படிக்கட்டு மீது வைத்து விடுவோம். சாமிக்குப் போட்டிருந்த மாலை இப்ப தண்ணியிலே மிதந்து கொண்டிருக்கும். அந்த மாலையையும் நாம் கஷ்டப்பட்டுப் படிக்கட்டுக்கு அருகிலே கொண்டு போய்ச் சேர்ப்போம். என்ன சொல்றீங்க?" என்றது.

அடுத்த ஒரு மணி நேரத்தில் குளத்




தின் படிக்கட்டின் மீது முருகனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த மாலையையும், பட்டுத் துண்டையும் சற்று நைந்து போன நிலையில் இருந்தாலும், எல்லா மீன்களும் இணைந்து கொண்டு வந்தன. ஜீவா காவலுக்கு அங்கேயே இருந்தது.

மீன்கள் எதிர்பார்த்தபடி காலை நேரத்தில் மீன் பிடிக்க யாரும் வரவில்லை. முருகன் கோவிலின் குருக்கள் சுந்தரம், சேற்றில் விழுந்துவிட்ட தன் செருப்பைக் கழுவுவதற்காகக் குளத்தின் படிக்கட்டுகளில் இறங்கினார். பட்டுத் துண்டும், மாலையும் அவர்

• உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் ஆப்பிரிக்காவின் சஹாரா.

கண்களில் பளிச்சென்று பட்டன.

சுந்தரம் குருக்களுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. சிலை காணாமல் போன விஷயம், கோவில் வாசலில் படுத்துக் கொள்ளும் வெள்ளையப்பன் மூலமாக ஊர் பூராவும் பரவிவிட்டது. மன வருத்தத்தோடு கோவிலுக்கு வந்த குருக்கள், சிலையைத் திருடியவன் ஊரின் எல்லைப் பகுதியில் எங்கேயாவது மறைத்து வைத்திருப்பானோ என்று எண்ணினார். சிலையைத் தேடி அலைந்தவருக்கு இப்போது விஷயம் புரிந்துவிட்டது. ஊருக்குள் சென்று விவரம் தெரிவித்தார். கிராமமே திரண்டு குளக்கரைக்கு வந்தது.



"ராத்திரி முருகனுக்குப் போட்டிருந்த மாலை இதுதான். என் கையால அவருக்கு அணிவித்த பட்டுத் துண்டும் இதுதான். மீன்கள்தான் இதை எல்லாம் இப்படி கொண்டு வந்து போட்டிருக்கும்னு நினைக்கிறேன்" என்றார் சுந்தர குருக்கள்.

"சிலையைக் காணோம்னு கோவிலுக்குப் பின்னாடி எல்லாம் தேடிப் பார்த்துக் கொண்டிருந்தேன். திருடியவன் சிலையைக் குளத்திற்குள்தான் போட்டிருக்க வேண்டும்" என்றார் குருக்கள்.

"ஒருவேளை நம்மை ஏமாற்றுவதற்காகப் பட்டுத் துண்டையும், மாலையையும் குளத்தங்கரை படிக்கட்டில் வைத்துவிட்டு, சிலையோடு தப்பி ஓடிப் போயிருப்பானோ?" என்றார் ஊர்த் தலைவர்.

"ராத்திரி பெய்த மழையிலே நிச்சயமா அவனால சிலையைத் தூக்கிட்டுப் போயிருக்க முடியாது. பட்டுத் துணியைக் கவனிச்சுப் பாருங்க. மீன்கள் கடிச்சிருக்கிறது நன்றாகவே தெரியறது. அதனால குளத்துக்குள்ளே தான் முருகனின் தெய்வச்சிலை இருக்கணும்."

"குருக்கள் ஐயா! நீங்க சொல்வது உண்மையாக இருக்கலாம். நம்ம ஊர்லே காத்தப்பன்தான் நீச்சல் அடிப்பதில் கெட்டிக்காரன். குளத்தோட ஆழமான பகுதிக்குச் சென்று பார்ப்பான். ஊருக்குப் போயிருக்கும் அவன் நாளைக்குத்தான் வருவான். அவன் வந்தவுடன் முதல் வேலை இந்தக் குளத்தில் இறங்கிப் பார்க்கச் சொல்வதுதான்" என்று அந்த ஊரின் தலைவர் சொல்லவே, ஜீவா மிகவும் சந்தோஷப்பட்டது.


முருகன் சிலையைத் திருடிய பக்கிரியும் அந்தக் கும்பலில் இருந்தான். அவ்வூருக்குக் குடி வந்து ஒரு வருஷமே ஆனதால், அவனுக்கு நீச்சல் தெரியும் என்று யாருக்கும் தெரியாது. அவனும் யாரிடமும் சொல்லவில்லை. சிலையைத் திருட டவுனிலிருந்து ஒரு ஆளுக்குப் பணம் கொடுத்து ரகசியமாக வரவழைத்து, குளத்தங்கரைப் படிக்கட்டில் உட்கார்ந்து திட்டம் தீட்டித்தான் திருடினான். இன்னும் சில நாட்கள் கழித்து குளத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் சிலையை எடுத்து, நல்ல விலைக்கு விற்க

• உலகிலேயே மிக உயரத்தில் உள்ள நாடு திபெத்.

திட்டமிட்டிருந்தான். காத்தப்பன் வந்தால் சிலையைக் கட்டாயம் கண்டுபிடித்து விடுவான் என்று அவனுக்குத் தெரியும். எனவே, அன்று இரவே யாருக்கும் தெரியாமல் குளத்திற்குள் இறங்கினான். ஆழமான பகுதிக்குச் சென்று சிலையை எடுப்பதை ஜீவா பார்த்துவிட்டது.

உடனே எல்லா மீன்களையும் வேகவேகமாக அழைத்தது. "நண்பர்களே! நாம் அனைவரும் ஒற்றுமையோடு பாடுபட்டால்தான் இந்தக் கயவனிடமிருந்து சிலையை மீட்கலாம். திருட்டுப் பயல்! பகலில் வந்தால் மாட்டிக் கொள்வோம் என்று இரவிலே வந்திருக்கிறான். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த ஆளின் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரைக் கடித்துக் கொண்டே இருக்க வேண்டும். உயிரைக் கொடுத்தாவது பிடித்திருக்கும் அவனது இடது கை தோள் பட்டையைக் கடித்து கடித்து ஓட்டை போட ஆரம்பித்தது. வலி தாங்க முடியாது, 'குய்யோ முறையோ' என்று கத்தினான். படிக்கட்டை அடைந்ததும் பெரிதாக அலறினான். குதித்த குதியில் ஜீவாவைத் தவிர எல்லா மீன்களும் நீரில் விழுந்தன. பக்கிரி சிலையோடு மேலே ஏறி முதல் படிக்கட்டில் சிலையை வைக்கும்வரை ஜீவா அவனுடைய தோள்பட்டையைக் கடித்துக் கொண்டே இருந்தது.

இரண்டாவது ஷோ சினிமா பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்த நான்கு பேர்களின் காதில், யாரோ அலறும் குரல் கேட்கவே குளத்தை நோக்கி ஓடி வந்தனர். தான் மாட்டிக் கொண்டால் ஆபத்து; திருடிய தனக்கு மீன்கள்



- *பன்றிக்கு அதன் நாவில் 5,500 ருசி மொட்டுகள் உள்ளன. பசுவுக்கு 35,000 ருசி மொட்டுகள் உள்ளன. மானுக்கோ 50000 ருசி மொட்டுகள் உள்ளன.*
- *புலிச் சுறா என்பது சுறாக்களில் ஒரு வகை. இது ஒரே சமயத்தில் அறுபது குட்டிகள் போடும்.*

- ஏ.எல். ராவியாகனி

சிலையைக் காப்பாற்ற வேண்டும்" என்று கூற, கண் இமைக்கும் நேரத்தில் அத்தனை மீன்களும் ஒற்றுமையோடு ஒன்று சேர்ந்து பக்கிரியின் மீது பாய்ந்தன.

மீன்களைக் கண்டபடி திட்டிக் கொண்டே ஒரு கையை உதறினான். சரியான பிடிமானம் இல்லாததால் சிலை நீருக்குள் விழுந்தது. மறுபடியும் சிலையை எடுத்து ஒரு கையால் பிடித்தபடி நீந்திக் கொண்டே படிக்கட்டை நோக்கி வந்தான்.

ஆத்திரத்தோடு எல்லா மீன்களும் அவன் உடல் பூராவும் கடித்தன. ஜீவா, சிலையைப் தண்டனை கொடுத்து விட்டன என்று திருந்திய பக்கிரி, ரத்தம் சொட்ட ஓடலானான், தன் வீட்டை நோக்கி குறுக்கு வழியில்.

சினிமா பார்த்துவிட்டு வந்த அந்த நான்கு பேர் கண்களிலும் நிலவின் ஒளியில், முருகனின் சிலை பளிச்சென்று தெரிந்தது. "ஆ... காணாமல் போன நம்ம முருகன் சிலை" என்று கூவியபடி சிலையைத் தூக்கிக் கொண்டு நான்கு பேரும் அவ்வூர்த் தலைவர் வீட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர்.

ஜீவா மகிழ்ச்சியுடன் மற்ற மீன்களுக்கு நன்றி கூறியது.

எஸ்.மோகனா



குங்குமப் பூவே!

குங்குமப்பூ... உலகத்தின் விலை உயர்ந்த வாசனைப் பொருள். அதன் மணமே அலாதியானது. இதன் வாசனைக்கு எதுவுமே ஈடாகாது. வாயில் நீர் ஊறவைக்கும் கீர், ரஸமலாய் போன்ற இந்திய இனிப்புகள் எல்லாம், குங்குமப்பூவின் மணமின்றி முழுமையடையாது. பொதுவாக 'கேசரம்' எனப்படும் குங்குமப்பூ, 'குரோட்டஸ் சாட்டிவுஸ்' என்ற பெயருடைய செடியின் பூவிலுள்ள சூல்முடி ஆகும். சஃப்ரான் (saffron) என்ற வார்த்தை அராபியச் சொல்லிலிருந்து வந்ததாகும். அராபிய மொழியில் சஃப்ரான் என்பதற்கு 'மஞ்சள்' நிறம் என்று பொருள். இந்துக்கள் குங்குமப்பூவைப் புனிதமாகக் கருதுவதால், முன்நெற்றியில் இட்டுக் கொள் கின்றனர். இதன் தாயகம் தெற்கு ஐரோப்பாவாகும். பிறகு ஸ்பெயின், ஆஸ்திரியா, ஃபிரான்ஸ், கிரீஸ், இங்கிலாந்து, பெர்சியா, இந்தியா மற்றும் ஈரானில் பயிரிடப்பட்டது.

குங்குமப்பூ செடி வளரும் வயல்கள், பார்க்க ரம்மியமாக இருக்கும். மணற்பாங்கான அல்லது சரளை நிறைந்த உலர்ந்த நிலத்தில் தான், குங்குமப்பூ செடி நன்கு வளருகிறது. பூண்டு வகையைச் சேர்ந்த இச் செடி 20 – 30 செ.மீ. உயரமே உள்ளது. செடி வளர்ந்து பூப் பூக்க ஓராண்டாகிறது. இலையுதிர் காலத்தில் குங்குமப்பூ செடி பூக்கத் துவங்குகிறது. பூக்கள் வாசனை மிகுந்ததாகவும், மூன்று இதழ்களுடன் பெரியதாகவும், வெளிர் வயலெட் அல்லது கருஞ்சிவப்பு நிறத்தில், ஆரஞ்சு நிற சூல்முடியுடன் இருக்கும். ஒரு செடியில் ஓரிரண்டு பூக்களே இருக்கும். காஷ்மீர் பள்ளத் தாக்கிலுள்ள போம்போர் நகரம், குங்குமப்பூ வயல்களுக்குப் பிரசித்தி பெற்றது. காஷ்மீரில் 4000 ஹெக்டேர் நிலத்தில் குங்குமப்பூ பயிரிடப் படுகிறது. ஒரு ஏக்கருக்கு 4 – 5 கிலோ பூக்கள்தான் கிடைக்கும். 5 கிலோ சூல் முடியை உலர வைத்தால் 1 கிலோ குங்குமப்பூ கிடைக்கும்.



லேசான மணமுடைய மஞ்சள் நிறப் பூ, அதிக மண முடைய ஆரஞ்சு நிறப் பூ, மிகவும் அதிகமான வாசனையுடைய சிவந்த வண்ணம் உடைய குங்கு மப்பூ, என மூன்று வகைகள் உள் ளன. குங்குமப்பூ கசப்புச் சுவை யுடனும், நெஞ்சைத் துளைக்கும் இனிமையான வாசனையுடனும் இருக்கும். இது ஈரமாக இருக்கும் போது, பிசுக்குத் தன்மையுடனும், நன்றாக உலர்ந்ததும் ஒடியும் தன்மையுடனும் இருக்கும். ஒரு கிலோ குங்குமப்பூவின் விலை சுமார் ரூ.7,000/- என்பதால், குங்குப்பூ குடும்பத்தைச் சேர்ந்த மற்ற பூக்கள், குங்குமப்பூ செடி யின் மற்ற பகுதிகள், இதழ்கள் போன்றவை கலப்படப் பொருட் களாகச் சேர்க்கப்படுகின்றன. உண்மையில் சூல் முடி மட்டும்தான் குங்குமப்பூ! எடைக் காக நீரும், கிளிசரினும் கலப்படம் செய்யப் படுகிறது. தென்னாப்பிரிக்காவிலுள்ள ஸைபீரியா, குரோரியா செடிகளின் பூக்கள் குங்குமப் பூவுடன், கலப்படப் பொருளாக உலகச் சந்தையில் கலக்கப்படுகிறது.

குங்குமப்பூ பலவித மருத்துவ குணங்கள் கொண்டதாகும். காய்ச்சலுக்கு, கல்லீரல், கணைய வீக்கத்திற்கு, வயிற்றுப் புண்ணுக்கு, கண் பொறைக்கு, இதயம், மூளை நோய் களுக்கும் குங்குமப்பூ பயன்படுகின்றது. நவீன மருத்துவத்தில் நிறமூட்ட மட்டுமே குங்குமப்பூ பயன்படுகிறது. (1 கிராம் குங்குமப்பூ நூற்றுக் கணக்கான லிட்டர் நீரை மஞ்சள் நிறமாக்கி விடும்). இந்தியாவில் யுனானி, ஆயுர்வேத மருத்துவத்தில் பெரிதும் உபயோகப்படுகிறது. குங்குமப் பூவைக் குளிர்ந்த, உலர்ந்த இடத்தில் வைத் திருக்க வேண்டும். சூரிய ஒளியில் வைத்தால் இதன் நிறம் வெளிறி விடும்.

குங்குமப் பூவைப் பாலில் போட்டு, கருவுற்ற தாய்மார்கள் சாப்பிட்டால் குழந்தை சிவப்பாகப் பிறக்கும் என்ற மூட நம்பிக்கை நிலவுகிறது. தாய், தந்தையரின் ஜீன்களின் பாரம்பரிய குணங்களே, குழந்தையின் நிறத்தை நிர்ணயிக்கிறதே தவிர, தாய் உண்ணும் உணவுப் பொருள் அல்ல.


குங்குமப்பூ அக்டோபர் மாத நடுவிலிருந்து நவம்பர் இரண்டாம் வாரம் வரை பூக்கும். சூரியனின் வெப்பம் அதிகமாகுமுன்பு காலையிலேயே பூக்களைப் பறிக்க வேண்டும். பூவின் எண்ணிக்கையும் பூக்கும் காலமும், ஒவ்வோர் ஆண்டும் வெப்பநிலை மற்றும் மழை அளவைப் பொறுத்து அமை கிறது. சூல்முடிகள் உலர்த்தப்பட்டு, பதப்படுத்தப்பட்ட நிலைமையைப் பொறுத்தே அதன் மதிப்பும், தரமும் நிர்ணயிக்கப்படுகிறது. குங்குமப் பூவைப் பறித்தவுடன் 3 – 5 நாட்கள் உலர வைத்து, பிறகு குச்சியால் லேசாக அடித்து, பெரிய ஓட்டையுள்ள சல்லடையால் சலிப் பார்கள். பின் அதனை நீரில் சுத்தம் செய்வார்கள். நீரில் போட்டதும் மிதக்கும் பூ, தனியாகச் சேகரிக்கப் படும். நீரின் கீழே தங்கும் பூத்துகள் கள் சேகரிக்கப்பட்டு, உலர்த்தப் பட்டு, விற்பனைக்கு அனுப்பப் படும். இது தரத்தில் உயர்ந்த வகையாகும். மிதந்த பூத்துகள் மீண்டும் உலர்த்தப்பட்டு, உடைக் கப்பட்டு, நீரில் சுத்தம் செய்யப் பட்டு, முன் போலவே பிரிக்கப் படும். இது கொஞ்சம் தரம் குறைந்த குங்குமப்பூவாகக் கருதப் படுகிறது.



மதுரை ஸ்பெஷல்







தொலைக்க மாட்டேன்!

தேய்ந்து போன நாட்கள்
வளர்பிறையாய், வசந்தமாய்,
வகுப்பு நேரங்கள்
பேசிப் பேசித் தீர்த்த நாழிகைகள்
நாளெல்லாம் நழுவிப் போன
ஞாபகங்கள்
முகப் பிம்பங்கள்,
மல்லிகை நேற்று மலர்ந்து மறைந்து
போவது மட்டுமல்ல
நாளும் மலர்ந்து முகரப்பட்டு
நசிந்து போவதும்தான்.

கண்ணீர்க் குளங்கள்
பொங்குகின்றன
உன் எண்ணத்தை
என்னுள்
விதைத்து விட்டேன்.
நிச்சயம் தொலைக்க
மாட்டேன்.

- என். ஹரிசேகர்,
திரு.வி.க. மாநகராட்சி
மேல்நிலைப் பள்ளி,
தத்தனேரி,
மதுரை.

பெயர்க் காரணம்?

மதுரைக்கு மற்றொரு பெயர் 'கூடல் மாநகர்'. இதன் பொருள் கோபுரங்கள் நிறைந்த நகரம் என்பதாகும்.

மதுரையை ஆண்டவர்கள் பாண்டியர்கள். பாண்டியர்களின் சின்னம் 'மீன்'. இந்தப் பொருள் பட மதுரை அம்பிகையின் திருப்பெயர் (மீன் + ஆட்சி) மீனாட்சி என்பதாகும்.



வடமொழியில் மீனாக்ஷி: மீன் வடிவ கண்களை உடையவள்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள பொற்றாமரைக்குளத்தில் இறைவனிடம் வாதாடியவர் நக்கீரர். இவர் இயற்றியது தான் 'திருமுருகாற்றுப்படை' என்னும் நூல்.

- வி.ஆர். ராதாகிருஷ்ணன்,
மனோஜியப்ப வீதி,
தஞ்சாவூர்.

கவிதை

நான் வேண்டுவன...

புன்னகை செய்யும்
பூக்கள் போதாது;
புண்ணியம் செய்யும்
பூமி வேண்டும்.
சிலையான கற்கள்
போதாது;
கலையான கல்வி
வேண்டும்!
ரத்தம் கசியும்
கத்தி வேண்டாம்.
உண்மை காக்க
புத்தி வேண்டும்!
சுட்டெரிக்கும்
சூரியன் போதாது;
சுகமான
நிலவும் வேண்டும்!

- ஏ. ஜெகன்குமார்,
பதினோராம் வகுப்பு,
அரசு மேல் நிலைபள்ளி,
எம். கல்லுப்பட்டி,
மதுரை மாவட்டம்.



சிரிப்பு மன்றம்

இந்தியாவிலேயே சிரிப்பதற்கென்று ஒரு நகைச்சுவை மன்றத்தை மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை குழந்தைகள் முதல் பெரியவர் வரை விதவிதமான நகைச்சுவை துணுக்குகள் சொல்லி, கேட்டு ஆனந்தமாய் சிரித்து வரலாம்.

- மு. பவானி,
கொடிமங்கலம், மதுரை.

மதுரை ஸ்பெஷல்

மல்லிகையே... மல்லிகையே...

மதுரை மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாகும். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை என்று புகழ் பெற்றது. கோவில் மாநகர் என்று கூறுமளவிற்கு இங்கு பழங்கால சிற்பக்கலை நயம் மிக்க கோவில்கள் நிறைய உள்ளன.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உலகப் பிரசித்தி பெற்றது. இங்கு வருடம் முழுவதும் விழா நடந்தாலும் சித்திரை மாதத்தில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவில் பல லட்சக்கணக்கான மக்கள் பங்கு பெறுகின்றனர்.

மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றி, மாசி, ஆடி, ஆவணி, சித்திரை என்று தெருக்கள் அழகாக அமைந்துள்ளன. மதுரையில் மட்டுமே பாதாளச் சாக்கடை வசதி அந்தக் காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.



இங்கு தெப்பக்குளம் அருகில் உள்ள முக்தீஸ்வரர் கோவிலில் மார்ச் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் 10 நாள் காலையில் சூரியனே சிவனை வணங்கும் காட்சியைக் கண்டு களிக்கலாம்.

நாயக்கர் காலத்தில் திருமலை நாயக்கரால் பிரம்மாண்டமாக மிகவும் அழகாகக் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மஹால் சிறந்த சுற்றுலாத்தலமாகும்.

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டு - திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை - இங்கு அமைந்துள்ளன.

காந்தி மியூசியம், தமுக்கம் மைதானம், ராஜாஜி பூங்கா, அழகர் கோவில், அணைப்பட்டி என பல முக்கிய இடங்கள் பார்க்கத் தக்கவை.

மதுரை மல்லிகைப் பூ மிகவும் பிரசித்தி பெற்றது. நடுஇரவில் கூட மக்கள் பயமின்றி நடமாடக்கூடிய ஊர் மதுரை. எல்லா மக்களும் சேர்ந்து ஒற்றுமையாக வாழும் ஊர் எங்கள் மதுரை.

- என்.எஸ்.கே. ரூபிணி ஸ்ரீ,
எட்டாம் வகுப்பு,
விவேகானந்தா மேல்நிலைப் பள்ளி, பாண்டி.

மதுரை ஸ்பெஷல்


புதிர்


ஒன்றிலிருந்து ஒன்பது வரை உள்ள எண்களை 5ஆல் பெருக்க சுலபமான வழி அந்த எண்ணின் (கோடியில்) கடைசியில் ஒரு புஜ்யம் சேர்த்து அதை இரண்டால் வகுக்க வேண்டும்.

- ஆர். முத்து ராஜா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
கொடிமங்கலம்,
மதுரை மாவட்டம்.

கீழே உள்ள கட்டங்களில் 1 முதல் 8 வரை உள்ள எண்களை நிரப்புங்கள். ஆனால் ஒரு எண் பக்கத்தில் அடுத்த எண் இருக்கக் கூடாது.

- கு. உதயா,
ஏழாம் வகுப்பு,
புனித வளனார் மெட்ரிக் பள்ளி,
மதுரை.






சில சரித்திர உண்மைகள்

- 1875ம் ஆண்டுதான் மதுரையில் ரயில்வே ஸ்டேசன் முதன்முதலாக தொடங்கப்பட்டது. முதல் ரயில் மதுரையிலிருந்து திருச்சிக்குச் சென்றது.
- 1880ம் ஆண்டு 'மதுரை கல்லூரி' என்ற பெயரில் முதன்முதலாக கல்லூரி மதுரையில் தொடங்கப்பட்டது.
- 1889ம் ஆண்டு மதுரையில் ஏ.வி. பாலம் போக்குவரத்துக்குத் திறந்து விடப் பட்டது. இது வைகை ஆற்றின் மீது கட்டப்பட்ட முதல் பாலம்.
- 1901ல் மதுரை தமிழ்சங்கம் தொடங்கப்பட்டது.
- 1904ம் ஆண்டு மகாகவி பாரதியார் சேதுபதி பள்ளியில் தமிழ் ஆசிரியராகச் சேர்ந்தார். பின் அமெரிக்கன் கல்லூரி மற்றும் அதன் பள்ளியில் சேர்ந்து பணியாற்றினார்.
- 1929ம் ஆண்டுதான் புகழ் பெற்ற டி.வி.எஸ் நிறுவனம் மதுரையில் தொடங் கப்பட்டது.
- 1966ம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் துவங்கப்பட்டது.
- 1980ம் ஆண்டு 5வது உலகத் தமிழ் மாநாடு மதுரையில்தான் நடந்தது.
- இந்தியாவில் முதன்முதலாக மதுரை யில் காந்தி அருங்காட்சியகம் 1959ம் ஆண்டு ஏப்ரல் 15 தேதி திறந்து வைக்கப் பட்டது. இதை திறந்து வைத்தவர் ஜவாஹர்லால் நேரு.

- கோவீ. இராஜேந்திரன்,
மதுரை





சிம்மக்கல், கரடிக்கல், யானைக்கல், மாட்டுத்தாவணி, நரிமேடு, கரி(யானை) மேடு, யானைமலை ஒத்தக்கடை என்பன மதுரையில் உள்ள சில ஊர்களின் பெயர்கள்.

- பாளை பசும்பொன்,
திருநெல்வேலி.



● யானைக்கு வாசனை அறியும் நரம்புகள் வாயில் உள்ளன.

● கரப்பான் பூச்சியின் இரத்தத்தில் சிவப்பு அணுக்களே கிடையாது. ஆகவே அதன் இரத்தம் வெண்மையாக இருக்கும்.

கரப்பான் பூச்சி எப்போதுமே 16 முட்டைகளே இடும்.

● விலங்குககளில் முதலைக்கு மட்டுமே மேல் தாடையை அசைக்கும் சக்தி உண்டு. முதலையால் கண்களைத் திறந்து கொண்டே தூங்கவும் முடியும்.

- கே. வெங்கடேசன், பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
கொடிமங்கலம், மதுரை மாவட்டம்.





தற்கால கட்டட வல்லுனர்களுக்கே சவால் விடும் அளவுக்குத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரமைப்பு கொண்டது மதுரை. 'நான் மாடக்கூடல்' என்ற பெயர் பெற்று, நான்கு மாசி வீதிகளும் மீனாட்சி கோவிலைச் சுற்றி அழகாக காணப்படுகின்றன. ஒருசமயம் கிராமத்தில் இருந்து வழி தவறி மதுரை வந்தது ஒரு கழுதை. நான் மாடக் கூடங்களையும் சுற்றிச் சுற்றி வந்தது. தினசரி மீனாட்சியின் தரிசனம்தான். ஒருநாள் அதைத் தேடிக்கொண்டு அதன் உரிமையாளர் மதுரை வந்தார். அழகு பெற்ற வைகை நதிக்கரையில் கழுதையுடன் சலவை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வளமான வாழ்க்கையைப் பெற்றார். மீனாட்சியை நம்பி மதுரைக்கு வந்து தொழில் ஆரம்பிக்கும் எவரும் தன் சொந்த ஊருக்குச் செல்லாமல் மதுரையிலேயே தங்கி விடுவார்கள். அதனால்தான் மதுரையைச் சுற்றும் கழுதையும் வெளியே செல்லாது என்ற பழமொழி வந்தது.

- எம்.ஏ. உத்ரா,
ஒன்பதாம் வகுப்பு,
டி.வி.எஸ்.
மெட்ரிக்
பள்ளி, மதுரை.

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆர்தர் எங் என்பவர் தன் வாழ்நாளில் நான்கு தடவை பயிர் தொழில் செய்து பொருள் சம்பாதிக்கப் பெருமுயற்சி செய்தார். தோட்டத்தைக் கொத்தினார், உழுதார். ஆனால் தோல்விதான் கண்டார். உடனே உழவுத் தொழிலை விட்டொழித்துவிட்டு பேனா பிடித்தார். பயிர்தொழில் புரிவது எப்படி என்பதைப் பற்றி புத்தகங்கள் எழுதினார். பெரும் புகழ் பெற்றார். இங்கிலாந்தின் விவசாய மந்திரியின் காரிய தரிசியாகும் பாக்கியத்தைப் பெற்றார்.

- கே. அர்ஜுன்,
பத்தாம் வகுப்பு,
நாய்ஸ் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
நரிமேடு, மதுரை.





''ஏன் அவன் மேல கோபமா இருக்கே?''

''பல்லு ஒண்ணு ஆடுதுன்னு சொன்னா பில்லர் சரியாப் போடலையாங் கிறான்!''

- என். ஹரிசேகர், திரு.வி.க. மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி, தத்தனேரி, மதுரை.

''ஏண்டா, அவனைக் கூண்டுக்குள்ள அடைச்சு வச்சிருக்கீங்க?''

''அவன்தான் கணக்குல புலியாச்சே! அதனாலதான்!''

- க. இளங்கோவன், உசிலம்பட்டி.



''எந்தத் தைரியத்திலடா லைசென்ஸ் இல்லாமல் வந்தே?''

''100 ரூபாய் இருக்கிற தைரியத்திலேதான் வந்தேன் சார்!''

- பி. விஜயக்குமார், எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலை பள்ளி, கொடிமங்கலம், மதுரை மாவட்டம்





பூதம்: நண்பர்களே ஆளுக்கு ஒரு வரம் தருகிறேன். கேளுங்கள்.


தாமு: ஒரு அறை முழுவதும் தங்கக் கட்டிகள் வேணும்.

ராமு: எனக்கு ஒரு அறை முழுவதும் பணம் வேணும்.

சோமு: எனக்கு இந்த இரண்டு அறைகளின் சாவியையும் கொடுத்து விடுங்கள்!

- எஸ். ஆனந்த்குமார், எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, கொடிமங்கலம், மதுரை மாவட்டம்.

சந்திரன்



நேரம் வரும் காத்திரு!

2. ஹாஸ்டலில் களேபரம்

பொற்கேணி பள்ளிக்கூட ஹாஸ்டலில் டெலிஃபோன் ஒலித்தது.

"ஹலோ!" ஹாஸ்டல் மேனேஜர் ஃபோனை எடுத்தார்.

"ஹலோ... நான் பி.டி. மோகன் செய்யாறுல இருந்து பேசறேன். யாரு பேசறது? ஹாஸ்டல் மேனேஜரா?"

"ஆமாம் சார், சொல்லுங்க! என்ன... பசங்க ஜெயிச்சிட்டாங்களா? அதை ஹாஸ்டல்ல சொல்லணுமா?"

"அதில்லைங்க! இங்க விளையாடும்போது அருணுக்கு அடிபட்டுடுச்சு. தோள் பட்டை எலும்புல சின்னதா ஒரு கிராக் விழுந்துருக்கலாம்ன்னு டாக்டர் சொல்றாரு! எக்ஸ்ரே எடுத்திருக்கோம். ரிசல்ட்டுக்கு வெயிட் பண்ணிட்டு இருக்கோம்."

"ஐயோ... அப்புறம்...?"

"அவங்க வீட்டுக்கும் தகவல் சொல்லணும். ஆனா பயந்துடப் போறாங்க! அந்த மாதிரி எதுவும் இல்லை. உடனே வைஸ்பிரின்ஸிக்கு மட்டும் சொல்லிடுங்க! என்ன பண்ணணும்ன்னு அவர் பார்த்துப்பார். நான் மறுபடியும் பேசறேன். வைச்சிடவா?"

"சரி சார்!"

சென்னையில் ஒரு தனியார் ஹாஸ்பிடல் ரூமிலிருந்து வெளியே வந்த அருண் அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன. அருணின் நண்பர்கள் ராகவ், கரீம் இருவரும் அங்கிருந்தனர்.

"இதுக்குத்தான் அப்பவே சொன்னேன். அவங்க அப்பா எங்க கேட்டாரு! ஏதோ... டெண்டுல்கர், சேவாக் மாதிரி வருவான்னு சொல்லி இஷ்டம் போல ஆட விட்டாரு! இப்பப் பாரு! கழுத்தைக்கூட திருப்ப முடியாம, படுத்துட்டு இருக்கான்" சோகம் தாளாமல் புலம்பிக்

● உலகிலேயே மிக நீளமான ரயில்வே பாலம் ஆப்பிரிக்காவிலுள்ள லோயர் சாம்பேஸி

கொண்டேயிருந்தார் அம்மா. அவரைப் பரிதாபமாகப் பார்த்தபடி பின்னால் வந்தனர் ராகவும், கரீமும்.

"சரி... சும்மாயிரும்மா! எல்லாம் சரியாயிடும்" என்று அம்மாவைச் சமாதானப்படுத்தினாள் அருணின் அக்கா.

யாமினி தொடர்ந்து, "அம்மாவுக்குத் தகவல் சொன்னது யாரு?" - ராகவ் மற்றும் கரீமைப் பார்த்துக் கேட்டாள்.

"நான்தான் சொன்னேன்!" என்றான் ராகவ்.

"நீ... அருண்கூட செய்யாறு போயிருந்தியாமே?"

"ஆமாம். அங்கயிருந்துதான் ஃபோன் பண்ணேன்."

"சரி... அதுக்குக் காசு வைச்சிருந்தியா?"

"இல்லை! நான் ஃபோன் பண்ணது, 'செல்'லுல!"

"செல்லுலயா? யாரோட செல்ஃபோன்? உங்க மாஸ்டர் எடுத்துட்டு வந்தாரா?"

ராகவ் பதில் சொல்லவில்லை.

பொற்கேணி பள்ளியின் ப்ரேயர் ஹால்.

எல்லா மாணவர்களும் கூடியிருக்க வைஸ்பிரின்ஸ்பால் பேசத் தொடங்கினார்:

"இன்னைக்கு உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தி சொல்லப் போறேன். நம்ம ஸ்கூல் கிரிக்கெட் டீம் செய்யாறுல நடந்த கிரிக்கெட் டோர்ணமெண்ட்ல கலந்துகிட்டு இப்ப ஃபைனல்ஸ் போயிருக்காங்க! நேத்தி மேட்ச்ல 4 விக்கெட் வித்தியாசத்துல நம்ம டீம் ஜெயிச்சிருக்கு! ஆனா, ஒரு சின்ன சோகம். நம்ம அருணுக்கு அப்ப அடிபட்டுடுச்சு! தோள்பட்டை எலும்புல பந்து பட்டு இப்ப, ட்ரீட்மெண்ட்ல இருக்கான். நாளைக்கு நம்ம டீம் ஃபைனல்ஸ் ஆடப் போறாங்க. அதுல அருண் கலந்துக்க முடியாது. அவன் ஆடினா ஃபைனல்ஸ்லயும் ஜெயிச்சுடலாம்னு நம்பிக்கையோட இருக்கலாம். ஆனா இப்ப அவன் ஆடப் போறதில்லை. அதோட, அவன் ட்ரீட்மெண்ட் முடிஞ்சி சீக்கிரம் திரும்பி வரணும். அதுக்காகவும், நம்ம டீம் யூசிசி கப்பை ஜெயிக்கணும்னும் எல்லாரும் ரெண்டு நிமிஷம் ப்ரே பண்ணுங்க!"

எல்லாரும் மௌனம் காக்க... வரிசையில் பின்னால் நின்ற ஒரு மாணவன் வயிற்றைப் பிடித்தபடி நெளிந்தான்.

அதைக் கவனித்த வைஸ் பிரின்ஸ்பால் முகம் மாறியது. ஒரு ஆசிரியரை அனுப்பி, அவனைக் கவனிக்கச் சொல்ல நினைத்து திரும்ப... அங்கேயும் ஒரு மாணவன் நெளிவது கண்ணில் பட்டது.

டென்ஷனானார் வைஸ்பிரின்ஸ்பால்.

"என்னப்பா நடக்குது இங்கே? ஏன்... என்னாச்சு, இவங்க ரெண்டு பேருக்கும்? ஏன் ப்ரேயர் ஹால்ல வந்து இப்படி நெளியறானுங்க? உடம்பு சரியில்லாத பசங்களை ஏன் இப்படி நிக்க வைச்சி படுத்தறீங்க?"



சத்தம் போட்டுக் கத்தினார் வைஸ் பிரின்ஸ்பால்.

அதன் பிறகுதான் மாணவர்கள் கவனித்தார்கள். இரண்டல்ல; இன்னும் பல மாணவர்களும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு நெளிவது தெரிய... அவர்களை நோக்கி ஓடினர். அதற்குள் வயிற்றைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தவர்களை மற்ற மாணவர்கள் நெருங்கி, தாங்கிப் பிடித்தனர்.

ஆசிரியர்களில் சீனியரான சதாசிவமும், மற்ற ஆசிரியர்களும் ஓடி, மாணவர்கள் உதவியுடன் நெளிந்தவர்களை ஓரம் கட்டினார்கள்.

சதாசிவம் முன்னால் போய், ''என்னப்பா... என்ன பண்ணுது? மயக்கம் வருதா? காலைல சாப்பிட்டயா, இல்லையா?'' என விசாரித்தார்.

''சாப்பிட்டேன் சார்!'' என்றான் அந்த மாணவன்.

''ஹாஸ்டல்ல, காலைல என்ன டிஃபன்?''

''பொங்கல், வடை சார்!''

''அப்ப சரி... அஜீரணமாயிருக்கும்! ஆனா ஏன் இத்தனை பேருக்கு ஒரே நேரத்துல...?''

சதாசிவம் விசாரித்துக் கொண்டிருந்தபோதே ப்ரேயர் முடிந்து, மற்ற மாணவர்கள் வரிசையாகக் கலைந்து தங்கள் வகுப்புகளுக்குச் சென்றார்கள். சில ஆசிரியர்கள் அவர்களை ஒழுங்கு படுத்தி அனுப்ப... ப்ரேயர் ஹால் காலியானதும் வைஸ் பிரின்ஸ்பால் அங்கு வந்தார்.

''என்னன்னு விசாரிச்சீங்களா?'' சதாசிவத்தைப் பார்த்துக் கேட்டார் வைஸ் பிரின்ஸ்பால்.

''எல்லாரும் வயிறு வலிக்குதுன்னுதான் சொல்றாங்க! காலைல டிஃபன், பொங்கல், வடைன்னு சொன்னாங்க! அதனால அஜீரணமாயிருக்குமோன்னு பார்த்தா, இத்தனை பேருக்கு ஒரே நேரத்துல எப்படி அஜீரணம் வரும்? வடைக்கு யூஸ் பண்ணின ஆயில்... இல்லைன்னா வேற ஏதாவது பிரச்னையான்னு பார்க்கச் சொல்லணும் சார்!'' சதாசிவம் தன் கருத்தைச் சொன்னார்.

''சரி... உடனே ஹாஸ்டல் மேனேஜர்... ஸ்டோர் கீப்பர்... குக் எல்லாரையும் வந்து என்னைப் பார்க்கச் சொல்லிடுங்க! உங்களுக்கு க்ளாஸ் இருந்தா, வேற டீச்சரை டெபுட் பண்ணிட்டு நீங்களும் என் ரூமுக்கு வாங்க! அதுக்கு முன்ன நம்ம டாக்டருக்கும் தகவல் சொல்லி உடனே வரச் சொல்லுங்க!'' என்றபடி நெளிந்த மாணவர்களை நெருங்கினார்.

''எங்கே ப்யூன் மாணிக்கம்? இவங்க எல்லாரையும் 'சிக்' ரூம்க்குக் கொண்டு போ. டாக்டர் வருவாரு! பசங்களைப் பார்த்து முடிச்சதும், என்னை வந்து பார்க்கச் சொல்லு! நீ கூட இருந்து கவனிச்சிக்க! சதாசிவம் போயிட்டாரா?'' பம்பரமாய் சுழன்றார் வைஸ் பிரின்ஸ்பால்.



● உலகிலேயே மிக வேகமாகப் பறக்கக்கூடிய பறவை 'ஸ்விஃப்ட்'

செய்யாறு கல்லூரி மைதானம் யூசிசி கோப்பை ஃபைனல்ஸ்க்குத் தயாராகிக் கொண்டிருந்தது. மைதானத்தில் பவுண்ட்ரி லைன்களுக்குச் சுண்ணாம்பில் கோடு போட்டுக் கொண்டும், விக்கெட்டில் ஆங்காங்கே மணல் தூவி ரோலரை உருட்டிக் கொண்டும் இருந்தனர் போட்டி ஏற்பாட்டாளர்கள்.

ஒரு பக்கம் பரிசளிப்பு விழாவுக்கான மேடை தயாராகிக் கொண்டிருந்தது.

லவுட்ஸ்பீக்கரில், ''இன்னும் சிறிது நேரத்தில் 20வது யூசிசி கோப்பை இறுதிப் போட்டி தொடங்க உள்ளது. பொற்கேணி பள்ளி அணியுடன், கலைமகள் மேல் நிலைப்பள்ளி அணி மோத உள்ளது'' என்று அறிவித்துக் கொண்டிருந்தனர்.

''பாருங்கப்பா! கிரவுண்ட் கொஞ்சம் ஈரமாத்தான் இருக்கும்னு தோணுது. அதனால, 'டாஸ்' ஜெயிச்சா ஃபீல்டிங் எடுத்துடுங்க! முதல்முறையா இப்பதான் ஃபைனல்ஸ் வந்திருக்கோம். எப்பாடுபட்டாவது ஜெயிச்சாகணும்'' என்ற பிரின்ஸ்பால் தொடர்ந்து, ''வில்சன் எங்கே?'' என்று அவனைத் தேடினார்.

வில்சன் ஓடி வந்து, ''சார்...'' என்றபடி அவர் முன் நின்றான்.

''பார்த்து விளையாடணும், தெரியுதா? செமி ஃபைனல்ஸ்ல மாதிரி ஆடிட்டு வராதே! கேப்டன் பொறுப்பு சும்மா இல்லை, தெரியுதா? உன் ஃபிரண்ட் இல்லாத குறைக்கு நீதான் இந்த மேட்சை ஜெயிச்சுக் கொடுக்கணும்.'' - பிரின்ஸ்பால்.

பொற்கேணி பள்ளியின் ஸ்டாஃப் ரூம்.

ஆசிரியர்கள் பலர் வகுப்புக்குச் சென்றிருக்க, மற்றவர்கள் ஓய்வில் இருந்தனர். காலையில் ப்ரேயரின் போது நடந்த பிரச்னைக்காகப் போன ஆசிரியர் சதாசிவம், இப்போதுதான் வந்து இருக்கையில் அமர்ந்தார்.

''என்ன சார்... ரொம்ப டல்லாயிருக்கீங்க?'' சதாசிவத்திடம் கேட்டார் இன்னொரு ஆசிரியர்.

''ம்... என்னத்தைச் சொல்ல? காலைல பசங்க சாப்பிட்டதுலதான் ஏதோ பிரச்னை. டாக்டர் பார்த்துட்டு ஃபுட் பாய்ஸன் ஆகியிருக்குன்னு சொல்றார். ஆனா ஹாஸ்டல் சாப்பாட்டுனால அப்படி ஆயிருந்தா எல்லாருக்கும்தானே ப்ராப்ளம் வந்திருக்கும். 600 பேருல 10...15 பேருக்கு மட்டும்தான் இப்ப ப்ராப்ளம். இவனுங்க வேற ஏதாவது சாப்பிட்டாங்களான்னு தெரியல'' சதாசிவம் தனது வருத்தத்தை வெளியிட்டார்.

அந்த நேரத்தில் கரீம், ராகவ் இருவருடனும் உள்ளே நுழைந்தார் கரீமின் அப்பா.


''குட் மார்னிங் சார்! சொன்னபடியே இன்னைக்குக் கூட்டிட்டு வந்துட்டேன்'' என்றபடி சதாசிவத்தைப் பார்த்தார்.

''வாங்க! குட் மார்னிங். கரீம்... சரி! ஆனா உங்க கூடவே ராகவும் வர்றான். அருணோட அப்பாவும் நீங்களும்தானே ஃபிரண்ட்ஸ்ன்னு சொன்னீங்க?'' என்றார் சதாசிவம்.

''அருண், வில்சன், ராகவ்... மூணு பேரோட அப்பாவும் என்னோட கிளாஸ் மேட்ஸ்தான். நாங்க எல்லாரும் ஒரே காலேஜ்ல, ஒரே கிளாஸ்ல படிச்சோம். அதனால ஆரம்பத்துல இருந்தே இவனுங்க எல்லாரும் ஃபிரண்ட்ஸ். ஒரே ஸ்கூல்ல தான் படிப்போம்னு இவனுங்க அடம் பிடிச்சதாலதான் இங்க... ஹாஸ்டல்ல போட்டிருக்கோம். எனிவே... இப்ப இவனுங்களை கிளாஸ்க்கு அனுப்பலாமா,

டிரிம்மர்

கிரிக்கெட் விளையாட்டில் டிரிம்மர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. டிரிம்மர் என்றால் என்ன? வீசப்படும் பந்து ஸ்டம்புகளில் படாமல் அவற்றின் மேல் வைக்கப்பட்டிருக்கும் சிறு குச்சிகளை மட்டும் கீழே விழச் செய்ய வேண்டும். இதுவே டிரிம்மர் எனப் படுகிறது.



- நெ. இராமன்

இல்லை...'' என்று இழுத்தார்.

''நோ ப்ராப்ளம். பர்மிஷன்ல தானே போயிருக்காங்க! இப்ப ப்யூன் வருவான். அவன் கூட க்ளாஸ்க்கு அனுப்பிட றேன்.''

''அப்புறம்... ஹாஸ் டல்ல ஏதோ ஃபுட் பாய்ஸன்னு, வைஸ் பிரின்ஸ்பால் டென் ஷனா இருக்கார். உங்களைப் பார்க்கச் சொல்லிட்டார்!''



''ஓ...அதுவா? அது ஒண்ணும் ப்ராப்ளமில்லை! ஹாஸ்டலுக்குள் ரெண்டு டூட்டி டாக்டர்கள் இருக்காங்களே! அவங்க பார்த்துப்பாங்க! வேற எதுவும் இல்லையே! அடுத்த மீட்டிங்குக்கு ரெடியாயிட்டு இருக்கேன். என்கொயரி நடத்தணும்!''

''சரி... அப்ப...?''

'கிளம்புங்க! நோ... ப்ராப்ளம். தைரியமா கிளம்புங்க! நான் பார்த்துக்கறேன். டேய்... நீங்க...! ம்... இதோ ப்யூனே வந்தாச்சு! அவரோட க்ளாஸுக்குப் போங்க!'' என்று ப்யூனுடன் அனுப்பி வைத்தார்.

கரீமும், ராகவும் வகுப்புக்குக் கிளம்ப, சதாசிவத்திடம் விடைபெற்றுக் கொண்டு கரீமின் அப்பா புறப்பட்டார்.

மாலை 6 மணி.

பொற்கேணி பள்ளிக்கூட ஹாஸ்டலில் இன்னும் என்கொயரி நடந்து கொண் டிருந்தது. வைஸ் பிரின்ஸ்பால் பிஸியாக இருந்தார். அந்த நேரத்தில் டெலிஃபோன் மணியடித்தது.

''ஹலோ!'' என்றார் மேனேஜர் பவ்ய மாக!

''நான் பிரின்ஸ்பால் பேசறேன். வைஸ் பிரின்ஸ்பால் இருக்காறா?'' என்று குரல் வந்தது டெலிஃபோனில்.

''சார் உங்களுக்குத்தான்! பிரின்ஸ்பால் கூப்பிடறார்!'' என்று ஃபோனை நீட்டினார்.

ஃபோனைக் கையில் வாங்கி, ''சார்... சொல்லுங்க சார்'' என்றார் வைஸ் பிரின்ஸ்பால்.

''நம்ம பசங்க ஜெயிச்சிட்டாங்கப்பா! 30 ரன் வித்தியாசத்துல, கலைமகள் ஸ்கூல் டீமைத் தோற்கடிச்சிருக்காங்க! நாம நெனைச்ச மாதிரி யூசிசி கப்பை ஜெயிச்சாச்சு! கரஸ்பாண்டண்டுக் குச் சொல்லிடலாம்ன்னு ட்ரை பண்ணேன். லைன் கிடைக்கலே! நீங்க தகவல் சொல்லிடுங்க! மத்தபடி இப்ப அந்தப் பசங்க எப்படி இருக்காங்க? பிரச்னை ஒண்ணுமில்லையே!''

''இல்லை சார்! நான் பார்த் துக்கறேன். நீங்க நேர்ல வந்ததும் பேசிக்கலாம். அவசரமில்லை சார்!'' - போனை வைத்தார் வைஸ் பிரின்ஸ்பால்.

மறுபடியும் டெலிஃபோன் ஒலிக்க, அவரே ஃபோனை எடுத்தார்.

''ஹலோ... பொற்கேணி ஹாஸ்டல்...''

''ஹா... ஹா...'' போனில் சிரிப்பொலி மட்டும் கேட்டது.

''ஹலோ... யாரு பேசறது?''

''யாரா? விஷம்டா! விஷம்! ஃபுட் பாய்ஸன்! புரியுதா? இதோட முடியலைடா! இன்னும் இருக்கு! நேரம் வரும்... கொஞ்சம் காத்திட்டிரு! அது வரைக்கும் 'வணக்கம்' சொல்லி விடை பெறு வது...?ம்... பேரைச் சொல்றதுக்கு நான் என்ன முட்டாளா? ...ப...!''

ஃபோன் கட்டானது. வைஸ் பிரின்ஸ் பால் டென்ஷனானார்.

(தொடரும்)



அன்புச் சிறை!

ஹாய் ஃப்ரெண்ட்ஸ்! எப்படி இருக்கீங்க? உங்களில் எத்தனை பேர் என்னைப் பார்த்திருப்பீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய பெயர் ஆங்கிலத்தில் ஹார்ன்பில். தமிழில் 'மலை மொங்கன்' 'மரத்தலையன்', 'இருவாய்க் குருவி' என்று பல்வேறு பெயர்களில் செல்லமாக அழைக்கிறார்கள். நான் உருவத்தில் பெரியவன். பறவைகளின் அரசன் என்று நீங்கள் கழுகைக் குறிப்பிடுகிறீர்கள். அந்தக் கழுகுகூட உருவத்தில் என்னை விடச் சிறியதே!

என்னுடைய அலகு ரொம்பப் பெரியது. மஞ்சளும் கறுப்புமாகக் காணப்படும். உடல் கறுப்பும் வெளுப்புமாக இருக்கும். இறகுகளால் ஆன நீண்ட வால் உண்டு.

ஆல், அத்தி, அரசு நிறைநத அடர்த்தியான காடுகளில் நாங்கள் வாழ்க்கை நடத்துகிறோம்.

பழங்கள்தான் எங்களின் முக்கிய உணவு. அத்திப்பழம் என்றால் கொள்ளைப் பிரியம். நினைக்கும்போதே நீர் ஊறுகிறது. சில சமயங்களில் அசைவ உணவையும் சாப்பிடுவது உண்டு. சிறிய பூச்சிகள், பல்லி, எலி, பறவைக் குஞ்சுகள், சிறிய தவளைகள் என்று பட்டியல் நீளும்.

மரப் பொநதுகளதான எங்கள் வீடு. சாதாரணமாகத் தரையில் நடமாடுவதை நாங்கள் விரும்புவதில்லை.

என்னுடைய குரல் கரகரப்பானது. கீச்சுக்குரலில் அலறுவேன். பறக்கும் போதும் ஒலி எழுப்புவேன்.

எங்கள் இனத்தில் உங்களைக் கவரும் முக்கிய அம்சமே நாங்கள் அடைகாப்பதுதான். மார்ச் முதல் ஜூன் வரை இனப் பெருக்க காலம். அந்த நேரங்களில் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்து, மரப் பொந்தில் கூடு அமைப்போம். ஒவ்வொரு ஆண்டும் அதே இடத்திற்குச் சென்று அடைகாப்பது என்பது எங்களுக்கு ஒரு செண்டிமெண்ட்.

பெண் பறவை பொந்தில் முட்டையிட்டு அடை காக்கும். என்னைப் போன்ற ஆண் பறவைகள் எங்களின் மலத்தை மண் போல் குழைத்து பெண் பறவையைச் சுற்றி சுவர் எழுப்புவோம். அந்தச் சுவரில் சிறு துளை மட்டும் இருக்கும்.

இது எதுக்குத் தெரியுமா? பெண் பறவைக்கு உணவு கொடுக்கத்தான். இப்படி இருக்கும் பெண் பறவையைப் பார்த்தால் நான் என மனைவியைச் சிறை வைத்திருப்பது போல் உங்களுக்குத் தோன்றும். இது கஷ்டப்படுத்தும் சிறை இல்லை, அன்புச் சிறை.

ஆண் பறவை வெளியில் சென்று

பழங்கள், பூச்சிகளைப் பிடித்துக் கொண்டு வந்து துளை வழியே பெண் பறவைக்குக் கொடுக்கும். முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளி வரும் வரை ஆண் பறவை நன்றாகக் கவனித்துக் கொள்ளும்.

முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளி உலகை எட்டிப் பார்த்தவுடன் பெண் சுவற்றை இடித்துக் கொண்டு வெளியே வரும். பிறகு ஆணும் பெண்ணும் சேர்ந்தே குஞ்சுகளை அன்புடன் கவனித்துக் கொள்வோம். எங்களில் ஆணும் பெண்ணும் சமம்.

பெண் பறவைக்குக் கண்களைச் சுற்றி வெள்ளையாக இருக்கும். இதை வைத்து ஆண், பெண் எது என்பதை நீங்கள் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம்.

எங்கள் இனத்தின் விலங்கியல் பெயர் ஆந்த்ர கோசரஸ் கோரநாடஸ். என்ன, வாய்க்குள் நுழையவில்லையா?



எஸ். சுஜாதா

ஆப்பிரிக்க, ஆசியக் காடுகளில் நாங்கள் அதிகம் இருக்கிறோம். இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளிலும், அசாம் மற்றும் அருணாசலப் பிரதேசங்களிலும் வாழ்கிறோம்.

உங்கள் ஊரில் என்னைப் பார்க்க விரும்புகிறவர்கள் ஏதாவது உயிரியல் பூங்காவுக்குச் சென்று பார்த்துக் கொள்ளலாம்.

இன்று எங்கள் இனம் அரிதாகி வருகிறது. பாதுகாப்புக்குரிய உயிரினங்கள் பட்டியலில் நாங்களும் இருக்கிறோம். எங்களைக் காப்பாற்றுவது உங்கள் கடமை. இல்லாவிட்டால் மனைவியை அன்புச் சிறை வைக்கும் எங்களைப் புத்தகத்தில் தான் பார்க்க முடியும்!



• காமராஜ்



• சாஸ்திரி

"எனக்குப் பாதி அடி!"

நேரம் இருந்தால்...

பிரிட்டிஷ் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு சமயம் புத்தகம் எழுதினார். அந்தப் புத்தகம் வெறும் நாற்பது பக்கங்களை மட்டுமே உடையதாய் இருந்தது. அதைப் படித்த ஒருவர் சர்ச்சிலிடம், "தாங்கள் இந்தப் புத்தகத்தை இன்னும் அதிகப் பக்கங்களில் எழுதியிருக்கலாமே... நேரம் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார். உடனே சர்ச்சில், "எனக்கு இன்னும் நேரம் கிடைத்திருந்தால் இதையே நான் ஐந்து பக்கங்களில் சுருக்கி எழுதியிருப்பேன்" என்றார்!

— குட்டி பிரசன்னா, கரூர்.

அன்பளிப்பு

பெர்னார்ட் ஷா புத்தகக் கடைக்குச் சென்று பழைய புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். ஒரு புத்தகத்தைப் பார்த்த போது சற்றே திடுக்கிட்டார். அது, ஷா ஒரு நண்பருக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்த அவர் எழுதிய புத்தகமே! சற்றே யோசித்த ஷா அந்தப் புத்தகத்தை விலைக்கு வாங்கி, 'மறுபடியும் என்னுடைய அன்பளிப்பு' என்று அதில் எழுதி அந்த நண்பருக்கே அனுப்பி வைத்தார்.

— என். ஜரினா பானு, திருபட்டினம்.

காப்பி அடித்தாயா?

அது மூன்றாம் வகுப்பு. கணக்கு வாத்தியார் மாணவர்களிடம், "மாணவர்களே! உங்க வீட்டுல உள்ள உங்க அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சி நான்கு பேருக்கும், ஆளுக்கு இரண்டு முட்டைகள் வீதம் வாங்கினால் மொத்தம் எத்தனை முட்டைகள் வாங்க வேண்டும்?" என்று சிலேட்டில் எழுதச் சொன்னார்.

ஒரு மாணவன் எழுந்து தன் சிலேட்டைக் காட்டி, "ஐயா! நான் விடை எழுதி விட்டேன்!" என்றான். அவன் அருகில் இருந்த மாணவன், இவன் போட்ட சத்தத்தால் நிமிர்ந்து பார்த்தான்.

அப்போது வாசல் அருகே வந்த தலைமை ஆசிரியருக்கு அமர்ந்திருந்த மாணவன், எழுந்து நின்ற மாணவனைப் பார்த்து காப்பி அடிப்பது போலத் தோன்றியது.

"ஏண்டா, அவனைப் பார்த்து காப்பி அடிச்ச?" தலைமையாசிரியர் கோபமாகக் கேட்டார். உடனே அந்த அப்பாவி மாணவன், "இல்லை ஐயா! நானும் அந்தக் கணக்கின் விடையை எழுதி விட்டேன். திடீரென அவன் சத்தமாகப் பேசியதால் அவனைத் திரும்பிப் பார்த்தேன்" என்றான்.

"பொய்யா சொல்றே? நீ காப்பி அடிச்சதை நான் பார்த்தேன்!" என்றபடி தலைமையாசிரியர் அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார். மாணவன் பரிதாபமாக அழ, கணக்கு வாத்தியார், "ஐயா... இவன் நல்ல பையன்... காப்பி அடித்திருக்க மாட்டான்!" என்றார்.

உடனே தலைமையாசிரியர் அந்த மாணவனின் சிலேட்டை வாங்கிப் பார்த்தார். அதில் 6 முட்டைகள் என்று எழுதியிருந்தது. அருகில்

இருந்த மாணவனை அழைத்தார். அவன் சிலேட்டில் 8 முட்டைகள் என இருந்தது. உடனே அவர் அந்த மாணவனிடம், "தம்பி! நீ காப்பி அடிக்கவில்லை என்பது தெரிகிறது. ஆனால் கணக்கின் விடையோ 8 முட்டைகள். நீ 6 என்று தவறாக எழுதியுள்ளாயே?" என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன், "ஐயா! அப்பா, அம்மா, தம்பி, தங்கை என்றால் 8 முட்டைகள் தான். ஆனால் என் அப்பாதான் சென்ற வாரம் இறந்து விட்டாரே! எனவே எனக்கு 6 முட்டைகள் என்பது தான் சரி" என்று வருத்தத்துடன் கூறினான்.

தலைமையாசிரியர் மனம் வருந்தினார். "என்னை மன்னித்து விடப்பா! உண்மை அறியாமல் நீ காப்பி அடித்ததாக நினைத்து உன்னை அடித்து விட்டேன்!" என்றார் அவர்.

அந்தச் சிறுவன், "ஐயா... நீங்கள் அடித்ததால் அழவில்லை. பொய் பேசி விட்டேன் என்று கூறியதால் தான் அழுதேன். என் தாய் பொய் பேசக் கூடாது, பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்று கூறியுள்ளார்" என்றான்.

அவர்தான் பிற்காலத்தில் தமிழக முதலமைச்சராக நேர்மையாகப் பணியாற்றிய கர்மவீரர் காமராஜர்.

— எம். வினோத்,
சங்கரன்கோவில்.

சம்பளம் போதும்!

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இரயில்வே அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் நண்பர் கடனாகப் பணம் கேட்டார். சாஸ்திரியோ தன்னிடம் இல்லை என்றார். அவர் மனைவி தன்னிடம் இருந்த சேமிப்புப் பணத்தில் கொடுக்கிறேன் என்றார். சாஸ்திரியோ, அடுத்த மாதமே தன்னுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார். மத்திய அரசு காரணம் கேட்டதற்குச் "சேமித்து வைக்கும் அளவுக்குப் பணம் வேண்டாம், தேவைக்கேற்ப சம்பளம் போதுமே" என்றார்.

— அ. சுமர்தாஜ்,
மரிமானி குப்பம்.

பாதி அடி

முரட்டுப் பையன் ஒருவன் தன்னைக் காட்டிலும் பலவீனனாய் இருந்த ஒரு பையனை அடித்துக் கொண்டிருந்தான். அப்போது வேறொரு பையன் அந்த வழியே வந்தான். இவனுக்கும் முரட்டுப் பையனைச் சமாளிக்கக் கூடிய அளவுக்குப் பலம் இல்லை. எனினும் முரடன் தன்னை விட பலவீனனை அடிக்கிறானே என்று கோபம் கொண்டான். கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு முரடனிடம் போய், "எத்தனை அடிகள் அவனுக்கு கொடுக்கப் போகிறாய்?" என்று கேட்டான்.

"நீ ஏன் கேட்கிறாய்" என முரடன் கூச்சலிட்டான். "அவனுக்கு நீ கொடுக்க விரும்பும் அடிகளில் பாதியை எனக்குக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் கேட்கிறேன்" என்றான் அந்தச் சிறுவன். முரடன் வெட்கமுற்றான். இப்படி பேசி முரடனின் உள்ளத்தை உருகச் செய்த பள்ளிச் சிறுவன்தான் பிற்காலத்தில் இங்கிலாந்தில் பெரிய கவிஞர்களுள் ஒருவரான 'பைரன்' என்று புகழ் பெற்றவர். அடிபட்ட பள்ளிச் சிறுவனோ பின்னாளில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகிவிட்ட ஸர் ராபர்ட் பீல்.


— கே. சுதர்ஷன், தூத்துக்குடி

• பெர்னார்ட் ஷா



• சர்ச்சில்







மாத்யூ ஹெய்டன்
உலகக் கோப்பை 2003


ஷான் பொல்லாக்
கோகுலம்
போஸ்டர்

டாக்டர் கு.கணேசன்



குரல் வளம் காப்பது எப்படி?

● **இரா. பிரமிளா,**
திருச்செந்தூர்.

? என் மகள் ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். அவளுக்கு முழங்கை, முழங்காலில் முள் முள்ளாய் தவளைச் சொறி உள்ளது. இதற்கு என்ன காரணம், டாக்டர்? அவள் அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் கிராமத்திற்குச் சென்றிருந்தபோது குளத்தில் குளித்தாள். அதனால் இருக்குமா?

! உங்கள் மகளுக்கு வந்துள்ள குறைபாட்டினை மருத்துவ மொழியில் சொல்வதென்றால் 'பிரைனோடெர்மா'. இது பெரும்பாலும் வைட்டமின் ஏ சத்துக் குறைவு காரணமாக ஏற்படுகிறது. சில நேரங்களில் வைட்டமின் சி, இ, பி–காம்ப்ளக்ஸ் ஆகியவை உடலில் குறைந்தாலும் இவ்வாறு உண்டாவது உண்டு. குளத்தில் குளிப்பதற்கும் இந்தக் குறைபாடு ஏற்படுவதற்கும் தொடர்பில்லை. வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ள உணவுகளைச் சாப்பிட்டால் இது விரைவில் குணமாகிவிடும். காரட், பப்பாளி, மாம்பழம், தக்காளி, பூசணி, மீன், மீன் எண்ணெய், ஈரல், முட்டை, பால், பாலாடை, வெண்ணெய், தயிர், முருங்கை, முட்டைக்கோஸ் மற்றும் பிற பச்சை நிறக் காய்கள், கீரைகள் ஆகியவற்றில் வைட்டமின் ஏ, இ மற்றும் பி-காம்ப்ளக்ஸ் சத்துகள் அதிகமாக உள்ளன. ஆரஞ்சு, சாத்துக்குடி, திராட்சை, ஆப்பிள், தக்காளி, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்களில் வைட்டமின் சி அதிகம். இந்த உணவுகளை அடிக்கடி சாப்பிட்டால் தவளைச்சொறி வராது. இதற்கு உடனடியாக நிவாரணம் கிடைக்க விரும்பினால் மருத்துவரின் ஆலோசனைப்படி வைட்டமின் ஏ ஊசி மருந்தையும், வைட்டமின் தொகுப்பு மாத்திரைகளையும் பயன்படுத்தலாம்.

● **க. துளசிராமன், கடம்பரவாழ்க்கை.**

? 'ஹெர்னியா' என்றால் என்ன? இது எப்படி ஏற்படுகிறது? என்ன சிகிச்சை?

! குடலிறக்கம் ஏற்படுவதை 'ஹெர்னியா' என்கிறோம். பிறவிக் குறைபாடு, நீடித்த மலச்சிக்கல், சிறுநீர்ப்பாதை அடைப்பு, அடிக்கடி இருமல் வருவது, உடற்பருமன் போன்ற பல காரணங்களால் இது ஏற்படுகிறது. பொதுவாக இது

வயிற்றில் உண்டாகும். நிற்கும்போது அல்லது நடக்கும்போது வயிற்றில் தசைகள் பலவீனமாக உள்ள இடங்களில் ஒரு கட்டி போல குடல் வெளியில் பிதுங்கித் தெரியும். படுத்ததும் இது மறைந்துவிடும். தொப்புள் மற்றும் அடிவயிற்றில் இவ்வாறு ஏற்படுவது வழக்கம். இதனை மருந்தால் குணப்படுத்த முடியாது. அறுவை சிகிச்சை செய்துதான் சரிசெய்ய முடியும். இது எல்லா வயதினருக்கும் வரலாம் என்றாலும் சிறுவர்களுக்கு இது மிக அதிகமாக வருகிறது.

● **த. மயில்வாகனன், சேலம் - 7.**

? 'மூளைச்சாவு' என்றால் என்ன டாக்டர்?

! விபத்து அல்லது வேறு ஏதாவது உடல் கோளாறு காரணமாக மூளைக்குச் செல்லும் ரத்தம் தடைபட்டு, தொடர்ந்து மூன்று நிமிடங்களுக்கு மேல் மூளை பணி செய்யவில்லை என்றால் மூளை இறந்துவிட்டது என்று பொருள். இதற்கு 'மூளைச்சாவு' (Brain Death) என்று பெயர். மூளைச்சாவு ஏற்பட்ட நபரை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது. அதே நேரத்தில் மூளைச்சாவு ஏற்பட்ட பின்னரும் அந்த நபருக்கு இதயம், சிறுநீரகம், நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், கணையம், கண்ணின் 'கார்னியா' போன்ற பகுதிகள் சில காலம் உயிரோடு இருக்கும். எனவே, மூளைச்சாவு ஏற்பட்ட நபரின் இத்தகைய உறுப்புகளை அகற்றி தேவைப்படும் நபருக்குப் பொருத்தலாம்.

● **சா. வெண்ணிலா,**

மார்த்தாண்டம்.

? எனக்கு அடிக்கடி தொண்டை கட்டிக் கொள்கிறது. குரல் கரகரப்பாக உள்ளது. என் குரல் வளம் காக்க என்ன செய்யலாம் டாக்டர்?


! குரல் மாறுமளவிற்குத் தொண்டை கட்டிக் கொள்ளும் போது தொடர்ந்து பத்து தினங்களுக்கு வீட்டில் யாருடனும் பேசக் கூடாது. குரல்வளைக்கு நல்ல ஓய்வு தர வேண்டும். கத்திப் பேசக் கூடாது. அதிகமாக ஓசை உள்ள இடங்களில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அதிகச் சூடாகவோ, அதிகக் குளிர்ச்சியாகவோ எதையும் சாப்பிடக் கூடாது. தினமும் இரண்டு முறை உப்பு நீரால் வாயைக் கொப்பளிப்பது நல்லது. தினமும் சில நிமிடங்களுக்கு மூச்சுப் பயிற்சி செய்வது பலனளிக்கும். மருத்துவரின் யோசனைப்படி ஆண்டி பயாட்டிக்குகளைச் சாப்பிடலாம்.

புதிர் இங்கே! பதில் கீழே!

1. முதல் இதயமாற்று அறுவை சிகிச்சையைச் செய்த மருத்துவரின் பெயர் என்ன?
   அ) வில்லியம் ஹார்வி.
   ஆ) வில்லியம் கூலி.
   இ) கிறிஸ்டியன் பெர்னார்ட்
2. உடலில் எந்த உறுப்பில் வைட்டமின் டி தயாராகிறது?
   அ) எலும்பு. ஆ) தோல்.
   இ) கல்லீரல்
3. பெண் குரலில் ஆண் பேசுவதற்கு என்ன பெயர்?
   அ) ஹைட்ரோபோனியா.
   ஆ) ஆண்ட்ரோபோனியா.
   இ) பூபர்போனியா
4. உடலில் உள்ள எலும்புகளிலேயே மிகச்சிறிய எலும்பு எங்கே உள்ளது?
   அ) காதில். ஆ) காலில்.
   இ) மூக்கில்
5. தாவர உணவில் இல்லாத வைட்டமின் எது?
   அ) வைட்டமின் பி2.
   ஆ) வைட்டமின் பி12.
   இ) வைட்டமின் பி6

விடை:

1. இ 2. அ 3. இ 4. அ
5. அ



9. மாலா தேடிய மாயப் பெண்

கதை : விஜி படம் : சேகர்




... உடனே அவளுக்குக் கோபம் வரும். சண்டையை ஆரம்பிக்கலாம்.
மாலா மந்திரகலா மீது கல்லை வீசினாள்.
என் தூக்கத்தைக் கலைத்தது யார்? ம்... எவ்வளவு தைரியம் உனக்கு?
தைரியம் இருக்கிறதாலதான் உன்கூட சண்டை போட வந்திருக்கேன்.
அன்னிக்குப் பாவம்னு நினைச்சது என் தப்பு. உன்னை என்ன செய்யறேன் பார்.


இந்த அம்புக்கு முதலில் பதில் சொல்.
ஹா... ஹா... இந்த அம்பு என்னை ஒன்றும் செய்யாது. என் உயிரை எடுப்பது சுலபமல்ல.
அப்படியா இதோ பார்.
ஆ... அம்பு கையில் பாய்ந்து ரத்தம் வருகிறதே! உன்னை...
என்னை ஒண்ணும் செய்ய முடியாது.
அந்த மூவரையும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தால் உன்னை மன்னித்து விடுகிறேன்.
என்ன திமிர்! நான் உனக்கு மன்னிப்புக் கொடுக்கப் போவதில்லை.


மந்திரகலா ஈட்டியுடன் கோபமாக வந்தாள்.
கடுமையான சண்டை நடந்தது.
இறுதியில் மந்திரகலா மேல் ஈட்டி பாய்ந்து கீழே சரிந்தாள்.
அப்பாடா! ஒரு வழியாக ஒழிந்தாள்.
ஆனால் சில நிமிடங்களில் மந்திரகலா மீண்டும் உயிர் பெற்று வந்தாள்.
ஹா... ஹா... ஹா...
இது என்ன புது பிரச்னை?
அடுத்த இதழில் முடியும்



எவரையும்

நாமிடும் உணவுக்காக
நாளெல்லாம் வால் குழைத்து
நம் உயிர் உடைமை காக்கும்
நாய் நன்றிப் பண்பைச் சுட்டும்.

மாரி பெய் முன்னே உணவை
வளமாகச் சேர்க்கச் செல்லும்
சாரியாய் எறும்புக் கூட்டம்
சேமிப்பின் அருமை சொல்லும்.

பூக்களில் ஒவ்வொன்றாகப்
புதுத் தேனை எடுத்துக்கூட்ட
ஈக்களில் தேனீ என்றும்
இடையறாதுழைத்துக் காட்டும்.

என்.சுந்தரராமன்.
மதுரை







மதிக்க வேண்டும்!

இரைதனைக் கண்ட காகம்
யாவையும் தானுண்ணாது
கரைந்ததன் கூட்டம் சேர்த்துக்
களிப்போடு பகிர்ந்து உண்ணும்.

வெய்யிலோ மழையோ குளிரோ
விடிகாலை ஐந்துக்கெல்லாம்
பொய்யாது கூவிக்காலம்
பிறழாமை சேவல் காட்டும்.

விலங்கு, புள், பூச்சியன்றோ
இவையென்று நாம் எண்ணாது
இலங்கிடும் பண்பைக் கண்டே
எவரையும் மதிக்க வேண்டும்.

மறக்க

மணிக் கணக்கு

இந்திய நேரத்திற்கும் மற்ற நாடுகளின் நேரத்திற்கும் உள்ள வித்தியாசம் பற்றி ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "நம் நாட்டிற்கும் அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்காள தேசம் போன்றவற்றிற்கும் இடையே சில நிமிட வித்தியாசம் தான் இருக்கும்'' என்று சொன்னார். அப்போது ஒரு மாணவன் எழுந்து, "அதெப்படி சார் இருக்கும்? நம்ம வகுப்பு அறையிலே இருக்கற கடிகார நேரத்துக்கும், உங்க கையிலே கட்டியிருக்கிற கடிகார நேரத்துக்



கும் பத்து நிமிஷம் வித்தியாசம் இருக்கே. அவ்வளவு தூரமா இருக்குற நாடுகளில் ஒரு நிமிஷம் தான் வித்தியாசமா?" என்று கேட்டான். ஆசிரியர் உட்பட மாணவர்களும் மெய் மறந்து சிரித்தனர்!

— எஸ். பிரசாந்த்,
நெல்லை.

எழுதா விட்டால்...?

என் தம்பி பயங்கர சுட்டி. ஒரு நாள் அம்மா சிலேட்டில் வீட்டுப் பாடம் எழுதச் சொன்னார். அவனோ எழுதாமல் விளையாடிக் கொண்டிருந்தான். அம்மா "பாடம் எழுதாமல் விளையாடிக் கொண்டே இருக்கிறாயா? இப்போ நீ உடனே போய் எழுதா விட்டால் கையை ஒடித்து விடுவேன்" என்று மிரட்டினார். "உடனடியாக அதைச் செய் அம்மா. நான் கையில் கட்டுப் போட்டுக் கொண்டால் இரண்டு மாதம் எழுத வேண்டிய தொல்லை இருக்காது" என்று தடாலடியாகச் சொல்ல நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம்.



— ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார் பாளையம்.

கட்டி வருது!

எங்கள் ஊரில் மழை பொழிந்து, வீட்டு வாசலில் மழை நீர் தேங்கி குட்டையாக நின்று கொண்டு இருந்தது. அதற்கு மண் கொட்டுவதற்காக யோசித்த போது பக்கத்தில் கிணறு வெட்டி இருந்தார்கள் என்பது நினைவு வந்தது. அங்கு நிறைய மண் மேடாக இருந்தது. அதைவெட்டி எடுக்கும்போது எங்கள்



மாமா, "பார்த்து வாருங்கள்" என்று சொல்லிக் கொண்டு இருந்தார். அருகில் என் தம்பி நின்று ஆட்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தான். ஒரு பெரிய மண் கட்டி உருண்டு வந்தது. அதைப் பார்த்த மாமாவோ "ஏய்! கட்டி வருது கட்டி வருது" என்று அவசரமாகக் கூறினார். உடனே என் தம்பி, "கட்டி வந்தால் எருக்கம் பால் அடித்து அதன் மீது கொஞ்சம் மண் போடுங்கள். சரியாகி விடும்" என்றான். "எனக்குக் கட்டி வந்த

முடியவில்லை!

போது, அம்மா அப்படி தான் செய்தாங்க" என்றவுடன் அனைவருமே சிரித்து விட்டோம்.

– ந. துரை,
விழுப்புரம்

டெஸ்டா, க்விஸ்ஸா?

எங்கள் வகுப்பாசிரியர் மிகவும் நல்லவர். வெறும் பாடங்களை மட்டும் நடத்தாமல் எங்களுக்குப் பொது அறிவு வளர வேண்டும்



என்பதற்காக அடிக்கடி, க்விஸ் போட்டிகளை நடத்துவார். ஒரு நாள் மிகவும் கடினமான பாடங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு மறுநாள் அவற்றில் டெஸ்ட் வைக்கப் போவதாகக் கூறினார். அந்தப் பாடங்கள் மிகவும் கடினமாக இருந்ததால் ஒரே நாளில் எங்களால் படிக்க முடியவில்லை.

மறுநாள் பயந்து கொண்டே வகுப்பிற்குச் சென்றோம். அவர் வந்து அட்டெண்டென்ஸ் எடுத்து முடித்தவுடன், நாங்கள் அனைவரும் ஏற்கெனவே பேசி வைத்திருந்தபடி மொத்தமாக, "சார்! இன்னிக்கு டெஸ்ட் வேண்டாம். அதற்குப் பதிலாக க்விஸ் வையுங்களேன்!" என்றோம். உடனே அவர், "டெஸ்ட்டுக்குப் பதிலா க்விஸ்ஸா, ஏன்?" என்று கேட்டார். உடனே செந்தில் குமார் என்ற மாணவன் எழுந்து, "சார்! டெஸ்ட்டுன்னா விடை தெரிஞ்சாதான் பாஸ் பண்ண முடியும். ஆனா க்விஸ்னா குருட்டாம் போக்கில் சரியான விடை கூறி பாஸ் பண்ணிடலாமே!" என்றான். ஆசிரியர், "படிக்கலைன்னா நேரா சொல்லிட வேண்டியது தானே! இப்படி சுத்தி வளைக்கணுமா?" என்றபடியே மேலும் இரண்டு நாள் அவகாசம் கொடுத்தார்.

– எம். வினோத்,
சங்கரன் கோவில்.

முதல் ரேங்க்

திருச்சியிலிருந்து உறவினர்கள் வந்திருந்தனர். அவர்கள் என் தங்கையிடம், "நீ என்ன படிக்கிறே, எத்தனாவது ரேங்க்?' என்று கேட்டார்கள்.

அவள் சிறிது நேரம் யோசித்து விட்டுப் "போன வருஷம், ஒன்பதாவது ரேங்க். அதுக்கு முந்தின வருஷம் பத்தாவது ரேங்க்" என்றாள்.

"அப்போ இந்த வருஷம்?" என்றார் வந்தவர். "அதுவா" என்றவள், "முதல் ரேங்க்" என்றாளே பார்க்கலாம்!

என் அப்பா, "புத்தகத்தையே கையிலே எடுக்கிறதில்லை. எப்படி ரேங்க் வரும்?"



என்றார். "நான்தானே வரிசையில் முதலில் நிற்பேன்" என்று அவள் பதில் கூறவும் அனைவரும் சிரித்து விட்டோம். வரிசையில் முதலில் நின்றதால் முதல் ரேங்க் என்று நினைத்து சொல்லி விட்டாள்.

– வி. கமலக்கண்ணி,
ஈரோடு.

உங்களிடமிருந்து...



ஆவல்...

மாலா தேடிய மாயப் பெண் படக் கதை பரபரப்பாகப் போய்க் கொண் டிருக்கிறது. தங்க மீனைக் கொன்றதும், மாயப் பெண்ணின் உயிர் பிரிந்து விட்டதா என்று அறிய மிகவும் ஆவலாக இருக் கிறேன்.

- எஸ்.அமீர்ஜான், பன்னிரண்டாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்

அழகு!

ஒரு ஆசானுக்கே உரிய சிந்தனை யுடனும் சுவாரசியத்துடனும் திகழ்கிறது 'கதையும் புதிரும்' பகுதி. வண்ணத்துப் பூச்சிக்கு ஒரு பூங்கா படித்தேன். மிகவும் அதிசயப்பட்டேன். அட்டையும் சரி, கட்டுரையில் வந்த படங்களும் சரி, அழகோ அழகு!

- ஆர்.ஜி.சரஸ்வதி, திசையன்விளை

படம் அருமை!

'நாயும் காகமும்' பாடலுக்கான படம் மிக நன்றாக இருந்தது. கழுதை எப்படி மனிதனானது, அரண்மனையில் எறும்பு கள், காட்டில் களேபரம் படக்கதைகளின் படங்களும் கதைகளும் ஜோர். வண்ணத் தூரிகை அற்புதம்!

- வி.ஆர்.கிருத்திகா, திருச்சி

எனக்கும் பிடிக்கும்!

ரயில் விளையாட்டு கலா தேவிக்கும் உனக்கும் மட்டும் தான் பிடிக்குமா ஜக்கு! எனக்கும் ரொம்பப் பிடிக்கும் தெரியுமா?

- வீ கார்த்திகா, பன்னிரண்டாம் வகுப்பு, இடைப்பாடி, சேலம் மாவட்டம்

மேட்ச் பார்த்த திருப்தி

'நேரம் வரும் காத் திரு' தொடர் ஆரம்பமே ஜெட் வேகத்தில் இருக்கிறது. கண் முன்னே கிரிக்கெட் மேட்ச் பார்த்த திருப்தி ஏற்பட்டது. கதைகள் அத்தனையும் நன் றாக இருந்தன. ஜோக்ஸ் சூப்பர்.

- ஆர். அம்பிகா, மதுரை

சீனியர் பற்றி...

சீனியர் உயிரினமான கரப்பான் பூச்சியைப் பற்றி நிறைய விஷயம் தெரிந்து கொண்டேன். கரப்பான் என்றால் பயந்து நடுங்கிய எனக்கு இந்தச் செய்திகள் ஆச்சரிய மூட்டின.

- என். அற்புத மேரி, ஒன்பதாம் வகுப்பு, பெ.மே.நி.பள்ளி, கும்பகோணம்.

கோகுலம் சுழல் கோப்பை

இந்த ஆண்டின் மூன்றாவது இதழ் வெளிவந்து விட்டது. சுழல் கோப்பை திட்டம் நினைவிருக்கிறதா?

ஒவ்வோர் ஆண்டும் கோகுலம் இதழ் களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதி கம் இடம் பெறுகின்றனவோ, அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பை யைப் பெற இப்பொழுதே தயாராகுங்கள்.

கொ.மா.கோதண்டம்



காலனை வென்ற நீலன்!

கருவாட்டுப் பாறையைத் தாண்டி 'எஸ்' வளைவு பாலத்தைக் கடந்து, வடபுறம் காட்டுப் பாதையில் அந்த ஜீப் திரும்பிச் சென்றது. ஆற்றங்கரை மரத்து நிழலில் ஜீப் நின்றதும் அழகரய்யா, வாசுதேவன் இருவரும் கீழே இறங்கினர்.

"நீங்களும் இறங்குங்க. இனி நடந்துதான் போகணும்." அழகரய்யா கூறியதும் பூங்குன்றன், சுதாகர், கண்ணன், மணி, பூங்கோதை, சுவேதா, பூஜா ஆகியோர் கீழே இறங்கினர்.

ஆற்றில் சிறிதளவு நீரே சென்று கொண்டிருந்தது. அங்கிருந்து பார்த்தால் மேற்கு மலைத் தொடர் கம்பீர அழகுடன் காட்சியளித்தது. சில இடங்களில் அருவிகள் விழுவது பளிச்செனத் தெரிந்தன.

அழகரய்யாவின் தோப்பிற்கு வாசுதேவன் தனது குழந்தைகளையும் அவர்களின் நண்பர்களையும் ஜீப்பில் அழைத்து வந்திருந்தார்.

ஆற்றைக் கடந்து கரை ஏறியதும் தோப்புகளாகத் தொடர்ந்து அடிவாரம் வரை சென்றது. தென்னந்தோப்பு, மாந்தோப்பு இவற்றின் ஊடே சென்ற வண்டிப் பாதையில் அவர்கள் நடந்து சென்றனர்.

மலையடிவார கடைசித் தோப்புதான் அவர்களுடையது. அது நூறு ஏக்கருக்கு மேலான பெரிய தோப்பு. உள்ளே தென்னை, மா, பலா, கொய்யா மரங்கள் செழிப்பாக இருந்தன. சுற்றிலும் எல்லையாக இலவ மரங்கள் இருந்தன.

இவர்கள் வருவதை அறிந்து, தோப்பில் இருந்த காவலாளி ஓடி வந்தார்.

● உலகிலேயே மிகப் பெரிய மியூசியம் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம்.

"பெருசு, இந்தக் குழந்தைகளுக்கு நம்ம தோப்பச் சுத்திக் காட்டுங்க. இளநி வெட்டிக் கொடுங்க. கொய்யாப்பழம் பறிச்சிப் போடுங்க. கிணத்தோர மாமரத்துல சப்பட்டை மாங்காய் தேனா இனிக்கும். ஒண்ணு ரெண்டு உடைச்சிக் குடுங்க. பத்திரமா கூட்டிப் போங்க. வேற ஒண்ணும் பயமில்லையே?"

அவருக்குப் பின்னே அவர்கள் நடந்தனர். அவர்கள் ஒரு ஓடையைக் கடந்து சென்றனர். அங்கே அடர்ந்த முள் மரங்கள் நிறைந்திருந்தன. பாதையில் ஏதோ காலடித் தடங்கள் தெரிந்தன.

கரை ஏறியதும், "இதோ நாய்க் குடை" என்று சத்தமிட்டான் சுதாகர்.

"அட! கரையில காளான் ரொம்ப முளைச்சிருக்கு, இருங்க பறிச்சித்தாரேன்." தனது துண்டில் காளான்களைப் பறித்து நிரப்பினார். பிறகு ஓடைக் கரை தேக்கு மரத்தில் இலைகளைப் பறித்து, எல்லோருக்குமாகப் பங்கு வைத்து பிரித்துக் கட்டி, ஆளுக்கொன்றாகப் பொட்டலங்களைத் தந்தார் பெரியவர்.

"வீட்ல போயி, இன்னைக்கே சமைக்கச் சொல்லி சாப்புடுங்க. உடம்புக்கு ரொம்ப நல்லது."

"இதோ, இங்கேயும் காளான் நிறைய இருக்குப் பெருசு" என்ற கண்ணன் காளான்களைப் பறித்தான்.

"தம்பி, தம்பி அதைப் பறிக்காதீங்க. அது பேய்க் காளான். அதைச் சாப்பிட்டா ஒரு வித பைத்தியம் மாதிரி வந்துடும். எம் பேத்தி தெரியாம சாப்பிட்டு டாக்டர்கிட்ட ரெண்டாயிரம் ரூபா செலவாச்சு. வேண்டாம் ஓடையில வீசிறுங்க."

"சரி பெருசு, எது நல்ல காளான், எது பேய்க் காளான்னு எப்படித் தெரிஞ்சுக்குறது?" மணி கேட்டான்.

"தம்பி, அடிப்பகுதி நல்லா வெள்ளையா இருந்தா நல்ல காளான். வேற நிறமாயிருந்தா பேய்க் காளான்."

"இதென்ன, காலடித் தடங்க சிறுசு சிறுசா இருக்கு?"

"மான் கூட்டம் இப்படி ஓடியிருக்கு."

"வாழக்கா மாதிரி தொங்குதே இதென்ன?"

"இது இலவங்காயி. இது முத்தினா உள்ள பஞ்சாயிருக்கும். அதுதான் நம்ம தலையணை உள்ள இருக்குற பஞ்சு. இந்தக் காயப் பார்த்தா கிளிக்கூட்டம், ஆஹா! இது பழுத்தா சாப்புடலாமேன்னு இந்த மரத்துலயே காத்திருக்குமாம். இது பழுக்கவே செய்யாது. காய்ஞ்சி போகும். கிளி ஏமாந்து போகும். அதனால 'இலவு காத்த கிளி'ன்னு பழமொழி சொல்லுவாங்க."

"அட! நல்ல கதையால்ல இருக்கு" என்றாள் பூங்கோதை.

அழகரய்யாவும் வாசுதேவனும் தோட்ட வீட்டிற்கு வந்தார்கள். இவர்களைப் பார்த்து வேறு ஒரு வேலையாள் ஓடி வந்து கொண்டிருந்தார். எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன இப்படி உசுரு போக ஓடி வர்றே?"

"முதலாளி, உச்சி மலையில மழை பேஞ்சிருக்கும் போல, ஆத்துல வெள்ளம் ரொம்ப அதிகமா வருது. தண்ணி வத்த நாலுமணி நேரமாவது ஆகும்."

"என்னப்பா, நான் உடனே திரும்பலாமுன்னு மதியச் சாப்பாடு கொண்டு வரலை. இப்ப இந்தக் குழந்தைகள் சாப்பிட என்ன



செய்ய?"

அப்போது அங்கு வந்து சேர்ந்தனர் பெரியவரும் குழந்தைகளும்.

"ஐயா, இவங்க எல்லார்கிட்டயும் காளான் கட்டித் தந்திருக்கேன். அதை வாங்கி நல்லா வறுவல் போட்டுத் தந்திடுறேன். ஓரளவு பசியாற முடியும்."

"சரி பெருசு, அப்படியே செஞ்சிக் கொடு."

சிறிது நேரத்தில் எல்லோரையும் உட்கார வைத்து, வாழை இலைகளைப் போட்டு, தேங்காய், வெங்காயம் கலந்த காளான் வறுவல் பரிமாறினார் பெரியவர்.

"காளான் ஒரு அருமையான இயற்கை உணவு. எதையும் விட இது சுவையா இருக்கு" என்றாள் பூஜா.

உண்டு முடித்த அவர்கள் கால்வாய்த் தண்ணீரில் கைகளை கழுவிக் கொண்டிருந்தார்கள். வாய்க்காலிலிருந்த ஒரு கல்லைப் புரட்டினான் மணி.

"ஐயோ ஏதோ கடிச்ச மாதிரியிருக்கே" அலறினான் அவன்.

அங்கிருந்து ஒரு அரணை ஓடியது.

"ஏய், பாம்புராணிப்பா."


"சாதாரணமா இது கடிக்காது; கடிச்சா விஷமாச்சே."

''அரணை கடிச்சா மரணமுன்னு சொல்லுவாங்களே'' என்றார் பெருசு.

"பெருசு நீரு சும்மா இரும். இப்ப எதுவும் மரண அளவுக்கு இல்லே'' என்ற அழகரய்யா, மணியின் கடித்த விரலுக்கு மேலே ஒரு சிறு கயிற்றால் கட்டுப் போட்டார். அவனை அப்படியே உள்ளே தூக்கிச் சென்று பாயில் படுக்க வைத்தார். மணியின் உடல் நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது.

''பெருசு, இங்க இருந்து





ஆத்தக் கடந்து அய்யனார் கோவில் அருவிப் பக்கம் போக பாதை இருக்கா?" பூங்குன்றன் கேட்டான்.

"பாதை இருக்கு தம்பி. என்ன செய்யலாம்?"

"என்ன அங்க கூட்டிட்டுப் போங்க பெருசு, அங்கே நீலன்னு ஒரு பையன் இருக்கான். அவனைக் கூட்டிட்டு வந்தால் சரியாக்கிடுவான்."

"சரி தம்பி, உடனே வாங்க."

அவர்கள் ஒற்றையடிப் பாதையில் ஓடினர். மற்ற சிறுவர்கள் செய்வதறியாது பயங்கலந்த உணர்ச்சியில் நின்று கொண்டிருந்தனர். பூங்கோதையும், சுவேதாவும் மணியின் அருகில் இருந்து கொண்டு, பனை ஓலை விசிறிகளால் விசிறினர்.

சிறிது நேரத்தில் ஆதிவாசிச் சிறுவன் நீலனும் பூங்குன்றனும் வந்து சேர்ந்தனர்.

"சாமி, பல்லு ரொம்பப் பதியலை. அதனால பெருசா ஆபத்தில்லே, ஆனாலும் விஷம் விஷம்தான். இங்க கருப்பட்டி இருக்குமா?"

சுதாகர் காவலாளியின் சமையல் அறைக்குச் சென்று, இரண்டு கருப்பட்டித் துண்டுகளைக் கொண்டு வந்து கொடுத்தான். மணியின் வாயில் சிறிது தண்ணீர் ஊற்றிய நீலன், அவனைத் தூக்கித் தன்மேல் சாய வைத்துக் கொண்டு கருப்பட்டியைத் தந்து, "இதை மென்னு தின்னுங்க சாமி" என்றான்.

மிரள மிரள விழித்த மணி அதை வாங்கிச் சாப்பிட்டான். பெருசு வந்து சேர்ந்ததும் அவரிடம் "நீங்க உடனே போயி வடக்கே இருக்குற பனை மரத்துல ஏறி, பனங்குருத்த அறுத்துட்டு வாங்க" என்று கூறிவிட்டு, அடுத்த காவலாளியிடம் "ஓடைக் கரையில சாரணைச் செடியிருக்கும். அதை வேரோட பறிச்சிட்டு வாங்க"என்றான்.

இருவரும் வந்ததும் சாரணை வேரை அரைத்து, ஒரு தம்ளர் தண்ணீரில் கலந்து குடிக்க வைத்தான். பனங் குருத்தைக் கடித்துச் சாப்பிட வைத்தான்.

"சாமிகளே, இனிமேல் ஒண்ணும் செய்யாது. கொஞ்ச நேரம் படுக்கட்டும். அப்புறம் இவர நடத்தியே கூட்டிட்டுப் போகலாம். ஊருக்குப் போயி, மூணு நாளைக்கு உப்பு, புளி, காரம் சேர்க்காம பத்தியம் இருந்தா, சரியாப் போகும்." நீலன் சொல்லி முடித்தான்.

அழகரய்யா ஒரு நூறு ரூபாய்த் தாளை அவனிடம் நீட்டினார்.

"சாமி, ரூபா வேண்டாம். அரிசியிருந்தா குடுங்க. எங்க சனம் சமைச்சி சாப்பிட்டுக்கிடுவாங்க."

"சரிப்பா, நீ நாளைக்கு இங்கே வா. பத்துப்படி அரிசி தர்றேன். இப்ப நாங்க போயிட்டு வர்றோம்."


நீலனும், "நானும் வர்றேன் சாமி" என்று கூறி விட்டுப் புறப்பட்டான்.

நாய்கள்

படக் கட்டுரை :
பிரசாத்




நாய் மனிதனின் நண்பன். வரலாற்றுக்கு முந்தைய காலக் கட்டத்திலிருந்து இன்று வரை நண்பனாக இருந்து வருகிறது. நாயின் குடும்பம் மிகப் பெரியது. ஓநாயும் நரியும் கூட நாயின் உறவினர்களே! தற்போதைய நாய்கள் ஆரம்ப கால நாய்களில் இருந்து பலவிதங்களில் வேறுபட்டிருக்கின்றன. இப்பொழுதும் காட்டு நாய்களுக்கும் வீட்டு நாய்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. நாட்டில் வாழும் நாய்களை ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.



கறுப்பு முதுகு நரி




நரி



ஆப்பிரிக்க வேட்டை நாய்


வேட்டை நாய்கள்

வேட்டை நாய்கள் பெயருக்கு ஏற்றாற்போல் நாகரிகம் ஆரம்பித்த காலத்திலிருந்தே மனிதனுக்கு வேட்டையில் உதவி வருகின்றன. சளுக்கி (Saluki) என்பது பழங்காலத்து வேட்டை நாய். மான்களை வேட்டையாட அரபு வேட்டைக்காரர்கள் இந்த நாயைப் பயன்படுத்தி வந்தனர். இது மிகவும் உறுதி வாய்ந்தது. ஃபாரோ (Pharaoh) என்ற வேட்டை நாயை கி.மு. 4000க்கு முன்பே எகிப்திய மக்கள் பயன்படுத்தி வந்ததைக் கல்வெட்டு களின் மூலம் அறிய முடிகிறது.




சளுக்கி

ஆஃப்கன் (Afghan) என்பது இன்னொரு வேட்டை நாய். இது 70 செ.மீ. உயரம் இருக்கும்.




ஃபாரோ வேட்டை நாய்




ஆஃப்கன் வேட்டை நாய்

மத்திய ஆப்பிரிக்காவைச் சேர்ந்தது பேசன்ஜி (Basenji) என்ற நாய். இதன் தலை சுருக்கங்களுடனும் வால் சுருண்டும் காணப்படும். உலகிலேயே குரைக்காத நாய் இது மட்டுமே!




போர்சாய்

போர்சாய் (Borzoi) என்ற ரஷ்ய நாய், ரஷ்யர்களின் வேட்டைக்கு உதவியது.




பேசன்ஜி

கிரேஹவுண்ட் (Greyhound) என்ற நாயும் மிகவும் பழமையானது. உயரமான இந்த நாய், நாய்களிலேயே மிகவும் வேகமாக ஓடக் கூடியது. நிறைய நாடுகளில் பந்தயங்களில் இந்த நாயைப் பயன்படுத்து கின்றனர்.



கிரே ஹவுண்ட்


ஐரிஷ் வுல்ஃப் ஹவுண்ட் (Irish wolf hound) உலகிலேயே மிக உயரமான நாய். 80 செ.மீ. உயரம் இருக்கும். ஐரிஷ் அரசர்கள் வேட்டைக்கு இதைப் பயன்படுத்தினர்.



ஐரிஷ் வுல்ஃப் ஹவுண்ட்

இங்லிஷ் ஃபாக்ஸ் ஹவுண்ட் (English fox hound) என்ற நாய் இங்கிலாந்தில் உள்ளது. பிளட் ஹவுண்ட் (Blood hound) என்ற நாய் மோப்ப சக்தி அதிகம் உடையது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இது மிகவும் உதவுகிறது.

பிளட் ஹவுண்ட்



இங்லிஷ் ஃபாக்ஸ் ஹவுண்ட்





பேசட் ஹவுண்ட்

குட்டைக் கால்களுடைய பேசட் ஹவுண்ட் (Basset hound) ஃபிரான்ஸில் காணப்படுகிறது. மிகச் சிறிய பிராணிகளை வேட்டையாட உதவுகிறது.


மண்ணைக் கிளறும் நாய்கள் (Terrier)

டெரியர் நாய்களும் வேட்டையாடக் கூடியவைதான். ஆனால் இவை நிலத்தடியில் வசிக்கும் முயல், எலி போன்றவற்றை வேட்டையாடக் கூடியவை. 'டெரா' என்ற லத்தீன் சொல்லிலிருந்து 'டெரியர்' என்ற வார்த்தை தோன்றியது. 'டெரா' என்றால் நிலம், பூமி என்று பொருள்.

ஸ்காட்லாந்தில் வசிப்பது ஸ்காட்டிஷ் டெரியர் (Scotish Terrier). இது உருவத்தில் சிறியது. குட்டைக் கால்களுடையது. உடலெல்லாம் ரோமங்கள் காணப்படும். மிகவும் அன்பான பிராணி.



ஸ்காட்டிஷ் டெரியர்



ஃபாக்ஸ் டெரியர்

ஃபாக்ஸ் டெரியர் (Fox Terrier) நரி, வளைகரடிகளை வேட்டையாடக் கூடியது.

புல் டெரியர் (Bull Terrier) என்ற நாய் பிரிட்டனில் புகழ் பெற்ற எருது விளையாட்டில் பயன்படுத்தப்பட்டது. ஏரிடேல் டெரியர் (Airedale Terrier) தான் டெரியர் நாய்களிலேயே 'ராஜா' என்று கருதப்படுகிறது.



ஏரிடேல் டெரியர்




புல் டெரியர்

இங்கிலாந்தில் ஓடும் நதியின் பெயர் 'ஏரி'. அந்த நதியில் உள்ள நீர் நாய்களை வேட்டையாடுவதால் ஏரிடேல் டெரியர் என்ற பெயர் ஏற்பட்டது.

கன்டாக் வகைகள் (Gundog)

இந்த வகை நாய்களை நேரடியாக வேட்டையில் ஈடுபடுத்துவதில்லை. இரையைக் கண்டுபிடிக்க மட்டுமே பயன்படுகிறது.



வெமரனர்


வெமரனர் (Weimaraner) என்ற நாய் கன்டாக் வகையில் குறிப்பிடத் தக்கது. ஜெர்மனி அரசர் வெமர் முதலில் பயன்படுத்தியதால் அவர் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. உருவத்தில் பெரியது. வெள்ளையாகவும் புத்திசாலித் தனத்துடனும் காணப்படுகிறது. உலகம் முழுவதும் காவல் துறையில் பயன்படுகிறது.

காக்கர் ஸ்பேனியல் (Cocker Spaniel) என்ற நாய் மறைந்திருக்கும் பறவைகளை வெளியே கொண்டு வர பயன்படுகிறது.



காக்கர் ஸ்பேனியல்

குறிப்பாகக் காட்டுச் சேவல்களைக் கண்டு பிடிப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.




இங்லீஷ் செட்டர்


இங்லீஷ் செட்டர் (English setter) அறிவுமிக்க அருமையான செல்லப் பிராணி.

யூட்டிலிட்டி வகை (Utility group)

இந்த வகை நாய்கள் குறிப்பாக எந்தச் செயல்களுக்காகப் பயன்படுகிறது என்பதைத் தெளிவாகக் கூற இயலாது. இவை சிறந்த செல்லப் பிராணிகள். இவற்றில் மிக முக்கியமனாது டால்மேஷியன் (Dalmatian). இது 18, 19ஆம் நூற்றாண்டுகளில் சமுதாய அந்தஸ்து மிக்கோரின் செல்லப் பிராணியாகக் கருதப்பட்டது.

புல்டாக்





டால்மேஷியன்

எருது விளையாட்டில் பயன்படுவதால் இது 'புல்டாக்' (Bull dog) என்று அழைக்கப்படுகிறது. சிறந்த வளர்ப்பு பிராணி, ஆயுட்காலம் குறைவு.

பூடில்



பூடில் (Poodle) நாய் ஜெர்மனியில் மிகவும் பிரபலம். அங்கு நடைபெறும் நாய் கண்காட்சியில் நிச்சயம் இடம் பெறும். உடல் முழுவதும் ரோமங்களுடன் பார்க்க அழகாக இருக்கும்.

பொம்மை வகைகள் (Toy group)

இந்த வகை நாய்கள் மனிதர்களுக்குச் சிறந்த தோழர்கள். பார்ப்பதற்குப் பொம்மை போல் காட்சி தருகின்றன. இவ்வகையில் மிகவும் பிரபலமானது பாமரேனியன் நாய் (Pameranian). லோச்சின் (Lowchen) என்ற நாய் பார்ப்பதற்குச் சிங்கம் போல் காட்சியளிக்கும். மால்டேஸ் (Maltese) என்ற நாய் இத்தாலியைச் சேர்ந்தது. பக் (Pug) சீனாவையும், ச்சிஹுவா (Chihuahua) மெக்ஸிகோவையும் சேர்ந்தவை. இவை இரண்டும் உலகிலேயே மிகச் சிறிய நாய்கள்.



பாமரேனியன்



லோச்சின்



மால்டேஸ்



பக்



இத்தாலியன் கிரே ஹவுண்ட்


பேசட் ஹவுண்ட்

ச்சிஹுவா




வேலைக்கார நாய்கள் (working group)

இது மிகப் பெரிய பிரிவு. இவ்வகை நாய்கள் மனிதர்களுக்குப் பல்வேறு விதங்களில் வேலை செய்கின்றன. இதில் ஜெர்மன் ஷெப்பர்ட் (German shepherd) பிரபலமானது. இது நன்றாகக் காவல் காக்கும்.




ஜெர்மன் ஷெப்பர்ட்

டாபர்மேன் (Dobermann) ஜெர்மனியைச் சேர்ந்தது. 19ஆம் நூற்றாண்டில் லூயிஸ் டாபர்மேன் என்ற வரி வசூல் செய்பவர் இந்த நாயை வரி வசூலிக்கப் பயன்படுத்தினார். டாபர்மேன் காவல் மற்றும் ராணுவத்தில் உதவி புரிகிறது.




டாபர் மேன்

காவல் துறையில் பணி செய்யும் மற்றொரு நாய் பாக்ஸர் (Boxer). இது பார்வையற்றவர்களை வழி நடத்தியும் செல்கிறது.



பாக்ஸர்

கோலி (Collie) ஸ்காட்லாந்து நாய். இது ஆட்டு மந்தைகளைப் பாதுகாக்கிறது.




கோலி

ஹஸ்கி (Husky) நாய்கள் ஆர்டிக் பகுதியில் சுமைகளை இழுத்துச் செல்கின்றன.



ஹஸ்கி

கிரேட்டேன் (Great Dane) உயரமான நாய். வேட்டைக்கு உதவுகிறது



கிரேட்டேன்.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குப் பிடித்தமான பரிசுப்போட்டி, ஜோக்ஸ், கதைகள், அனுபவங்கள், துணுக்குகள், ஓவியப் போட்டி என பல விஷயங்கள் கோகுலத்தில் வெளிவருகின்றன கோகுலத்தைப் படித்து மகிழ்வதுடன் உங்கள் படைப்புகளையும் அனுப்பி வைக்கலாம். உங்கள் நண்பர்களையும் கோகுலம் உறுப்பினராக்கலாம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

புதிர்



பக்கம்

I ஆறு எழுத்துள்ள ஓர் ஊர் உள்ளது. முதல் எழுத்து காதில் உள்ளது, மூக்கில் இல்லை. இரண்டாம் எழுத்து இஞ்சியில் உள்ளது, சுக்கில் இல்லை. மூன்றாம் எழுத்து சிவப்பில் உள்ளது, கறுப்பில் இல்லை. நான்காம் எழுத்து கோபுரத்தில் உள்ளது, குடிசையில் இல்லை. ஐந்தாம் எழுத்து மரத்தில் உள்ளது செடியில் இல்லை. ஆறாம் எழுத்து மாம்பழத்தில் உள்ளது, மாங்காயில் இல்லை. அது எந்த ஊர் தெரியுமா?

- **ஆர். ஆர். பூபதி,**
கன்னிவாடி, திண்டுக்கல்.

II எனது தேர்வுத்தாள் பதிவெண் ஆறு இலக்கங்களையுடையது. 10 ஆல் வகுபடும். முதலாம் எண்ணும் ஆறாவது எண்ணும் ஒரே மதிப்புடையவை. இரண்டாவது எண்ணையும், மூன்றாவது எண்ணையும் பெருக்கினால் ஐந்தாவது எண் கிடைக்கும். இரண்டாவது எண்ணையும் மூன்றாவது எண்ணையும் கூட்டினால் நான்காவது எண் கிடைக்கும். அப்படியானால் என் பதிவெண் என்ன?

III பள்ளி நிகழ்ச்சியொன்றில் மொத்தம் மூன்று பாடல்கள் பாடப்பட்டன. ராமு இரண்டு பாடல்களும், சோமு இரண்டு பாடல்களும் பாடினர். எப்படி?

- **நெ. இராமன், சென்னை**

IV பெரிய குடும்பம் அது. நிறைய சகோதரர்களும், சகோதரிகளும் இருந்தனர். ஒருவனுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனரோ அதே எண்ணிக்கையில் சகோதரிகளும் உள்ளனர். ஆனால் ஒரு சகோதரிக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனரோ அதில் பாதி எண்ணிக்கையில்தான் சகோதரிகள் உள்ளனர்.

அப்படியானால் அவர்களில் சகோதரர்கள் எத்தனை பேர்? சகோதரிகள் எத்தனை பேர்?

- **ஏ.கே.எஸ். குமார், வத்ராப்**

V கீழே உள்ள கட்டத்தில் 4 முதல் 19 வரை எண்களை நிரப்ப வேண்டும். எந்தப் பக்கம் இருந்து நான்கு கட்டங்களைக் கூட்டினாலும் அதன் கூட்டுத் தொகை 46 வர வேண்டும். முயன்று பாருங்களேன்.

- **சிவ. மணவழகி, திருச்சிற்றம்பலம்**

VI கீழே கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளின் பதில்கள் 'அ'

என்ற எழுத்தில் தொடங்கும். பதில்கள் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு மற்றும் எட்டு எழுத்துகளில் அமைந்திருக்கும். எங்கே விடைகளை எழுதுங்கள் பார்க்கலாம்!

1) சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' எனப் பெயர் மாறக் காரணமாக இருந்த தலைவர்?

2) முதன் முதலில் 'திருக்குரான்' எந்த மொழியில் எழுதப்பட்டது?

3) கீதகோவிந்தம் என்ற வடமொழி நூலின் மறுபெயர்?

4) தமிழ் இலக்கியத்தில் எழுதப்பட்டுள்ள முதல் நூல்?

5) இலங்கையின் பழைய தலை நகரம்?

6) ஜல்லிக்கட்டுப் போட்டிக்குப் பெயர் பெற்ற ஊர்?

- கி. எழில்,
மயிலாடுதுறை

புதிர் விடைகள்:

I. காஞ்சிபுரம்

II. 024680

III ராமுவும், சோமுவும் தனித்தனியாக ஒரு பாடலும் இருவரும் சேர்ந்து ஒரு பாடலும் பாடினர்.

IV நான்கு சகோதரர்கள், மூன்று சகோதரிகள்.


V

10	15	4	17		46
5	16	11	14		46
19	6	13	8		46
12	9	18	7		46
46	46	46	46		46

VI 1) அண்ணா, 2) அராபிக், 3) அஷ்டபதி 4) அகத்தியம் 5) அனுராதபுரம் 6) அலங்காநல்லூர்

குறுக்கெழுத்துப் புதிர் விடை







அன்புள்ள ஜக்கு...

● வே. சுபஸ்ரீ, நல்லூர்.

? பரீட்சை நெருங்கி விட்டது. காலையிலும் இரவிலும் அதிக நேரம் கண்விழித்துப் படிக்க வேண்டியுள்ளது. தூக்கம் அதிகம் வருது; கண்ணெல்லாம் எரியுது. இதைத் தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும் ஜக்கு?

அன்றைய பாடங்களை அன்றே படித்தால் பரீட்சைக்கு என்று அதிகமாகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. மற்ற நேரங்களை விட பரீட்சையின் போது அதிக நேரம் படிக்க வேண்டியது இருக்கும். ஆனால் இரவெல்லாம் தூங்காமல் விழித்து படிக்கக் கூடாது. மறுநாள் பரீட்சையில் உங்களை அறியாமல் தூக்கம் வந்து, பதில் தெரிந்தும் எழுத முடியாமல் போய்விட வாய்ப்புண்டு. குறைந்த பட்சம் ஆறு மணி நேரமாவது அவசியம் தூங்க வேண்டும். படிக்கும் போது அடிக்கடி கண்களைச் சிமிட்டிக் கொண்டால் கண் எரிச்சலைத் தவிர்க்கலாம். படிக்கும் போது தூக்கம் வந்தால், குளிர்ந்த நீரால் முகம் கழுவி தூக்கத்தைப் போக்கிக் கொள்ளலாம். அட்வான்ஸ் வாழ்த்துகள் சுபஸ்ரீ.

● வீ. கலாதேவி, இடைப்பாடி.

? என்ன ஜக்கு, இடையர்பாடி மருவி தான் இடைப்பாடி ஆகிவிட்டது. ஆனால் போன மாதம் கோகுலத்தில் அதை கிடைப்பாடியாக்கிட்டியே?

இந்தக் கேள்வியில் மட்டும் தான் 'இ'யையும், 'கி'யையும் வித்தியாசப்படுத்தி எழுதியிருக்கிங்க. மற்றபடி இரண்டு அஞ்சல் அட்டையிலுமே முகவரியில் 'இ'க்கும் 'கி'க்கும் வித்தியாசமே இல்லை. நான் என்ன செய்வது? ஏற்கெனவே நான் கண்ணாடி போட்டிருக்கேன். கொஞ்சம் தெளிவாக எழுதலாமே கலா!

இராகு, கேது பாம்புகள் எங்கிருக்கின்றன?

● சாருலதா, சென்னை.

? இராகு, கேது பாம்புகள் வானில் எங்கிருக்கின்றன?

இராகு, கேது என்ற பாம்புகள் உண்மையில் இல்லை. பூமி, சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகிறது. அது போல சந்திரனும் பூமியை மற்றொரு பாதையில் சுற்றி வருகிறது. இந்த இரண்டு பாதைத்தளங்களும் ஒன்றுக்கொன்று 5 பாகைக் கோணத்தில் சாய்ந்துள்ளன.

சூரியனை வலம் வரும் பூமியின் வட்டப் பாதையும், பூமியை வலம் வரும் சந்திரனின் வட்டப் பாதையும், இரண்டு புள்ளிகளில் வெட்டிக் கொள்கின்றன. இந்தப் புள்ளிகளுக்கு ஆங்கிலத்தில் A, B என்று பெயரிடுவதைப் போல, நாம் இராகு, கேது என்று பெயரிட்டிருக்




1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஜனவரி இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

சரியான விடை:

1. ஆர்க்கிமிடீஸ் — யுரேகா
2. தார் பாலைவனம் — இராஜஸ்தான்
3. பஹ்ரைன் — தினார்
4. தலாய் லாமா — புத்த மதம்
5. ஸ்வீடன் — ஸ்டாக் ஹோம்
6. பைப்பர் நைக்ரம் — மிளகு
7. சேவல்
8. ஹரித்துவார்



பரிசு பெற்றவர்கள்:

1. ச. துர்கா பூரணி, அருள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை.
2. எஸ். விஜயகுமார், ஏழாம் வகுப்பு, ஜியான் மெட்ரிக் பள்ளி, சேலையூர்.
3. ஜி. பாரதி, பத்தாம் வகுப்பு, டி.எம்.பள்ளி, நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம்.
4. சு. அட்சயா, பதினோராம் வகுப்பு, புலியூர், கரூர் மாவட்டம்.
5. எஸ். ஜெயலக்ஷ்மி, நான்காம் வகுப்பு, ஸ்ரீ மாதா மெட்ரிக் பள்ளி, கும்பகோணம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கிறோம். இவை கற்பனைப் புள்ளிகள்தான்! அங்கு கோள்களோ, பாம்புகளோ கிடையாது. இந்தப் புள்ளிகளில் சந்திரன் நுழையும் போது ஒளி மறைப்புகள் (கிரகணம்) ஏற்படுகின்றது. இந்த ஒளி மறைப்பு சூரிய கிரகணமாகவோ, சந்திர கிரகணமாகவோ நிகழ்கிறது.

● **ப. காளிதாசன், நீர்விளங்குளம்.**

? வெள்ளை நிறங்களில் மயில், கிளிகள் உண்டா ஜக்கு?

உண்டு. உயிரியல் பூங்காக்களில் கண்டு களிக்கலாம்.

● **ஆர். அம்பிகா, மதுரை.**

? எங்களைப் போன்ற பள்ளி மாணவர்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு மணி நேரம் டீ.வி. பார்க்கலாம்?

நல்ல நிகழ்ச்சிகளாக இருந்தால் ஒரு நாளைக்கு அரைமணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை டீ.வி. பார்க்கலாம். புத்தகம் வாசிப்பது, விளையாடுவது என மனதுக்கும், உடலுக்கும் ஆரோக்கியம் தருகிற பொழுது போக்குகள் இருக்கும் போது, டீ.வியிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவதால் நம்முடைய மற்ற திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியாமல் போய்விடும். கண்களும் பாதிக்கப்படும்.

● **எஸ். அமீர்ஜான், நல்லூர்.**

? பாட சம்பந்தப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுவியா ஜக்கு?

ஸ்கூலில் தான் என் டீச்சர் கேள்வி கேட்கிறார் என்றால் நீயுமா அமீர்ஜான்?

● **ஆர். சீதாலக்ஷ்மி, மதுரை.**

? ஜக்கு, உங்கள் இனத்தில் (குரங்கு) எத்தனை வகைகள்?

எங்கள் இனத்தில் பல வகை உண்டு. கொரில்லா, சிம்பன்சி, உராங் உடான், கிபன் என்பவை வாலில்லாக் குரங்குகள். இவை மனித இனத்தைப் பெரிதும் ஒத்துள்ளன. அனுமான் குரங்கு, குல்லாய்க் குரங்கு, கருங்குரங்கு போன்றவை இந்தியாவில் காணப்படுகின்றன. தேவாங்கும் எங்கள் இனத்தைச் சேர்ந்தவையே!



சேகரின் செங்கதிர் மாலை!

சேகருக்குப் பாட்டுக் கேட்பதும், கிரிக்கெட் விளையாடுவதும் அல்வா சாப்பிடுவது மாதிரி. அன்றும் கிரிக்கெட் விளையாடி களைத்துப் போய் வீடு திரும்பினான் சேகர்.

"லீவு நாட்களில் வீட்ல தங்கறதேயில்லை. ராஜனுக்குக் காலில் சுளுக்கு. உன்கிட்ட ஏதோ உதவி வேணும்னு கேட்கறான். போய் என்னன்னு கேள்" என்றாள் அம்மா.

சேகர் ராஜனின் அறைக்குள் நுழைந்தான்.

"சேகர், எனக்கு அடுத்த வாரம் பரீட்சை. மயிலிறகாதிச் சூரணம், அஸ்வ கந்தா லேகியம் பற்றிச் சில நோட்ஸ் வேணும். எனக்குத் தெரிந்த ஓய்வு பெற்ற பேராசிரியர் ஒருவர் இருக்கிறார். எப்பவும் ஆராய்ச்சி பண்ணிக்கிட்டே இருப்பார். அவர் வீடு மடிப்பாக்கத்திலிருக்கு. போய் வாங்கிட்டு வர்றீயா?" என்றான் ராஜன்.

சேகர் சம்மதித்தான்.

ஞாயிற்றுக் கிழமை காலை சேகர் கிளம்பினான். புரபசர் சாமி என்று விசாரித்ததும் அந்தத் தெரு மக்கள், ஏதோ பத்துக்கால் பூச்சியைப் போல அவனைப் பார்த்தார்கள்.


ஒரு வழியாக 15ம் நம்பர் வீடு கிடைத்தது. வாசலில் பழைய ரிக்ஷா நின்றது. காலிங் பெல்லைத் தேடினான். இல்லை.

"சார், சார்" என்று கூப்பிட்டான்.

"யாரது, ராஜனின் தம்பி சேகரா?" என்று குரல் கேட்டது.

கதவு திறந்து சாமி எட்டிப் பார்த்தார். சோடா பாட்டில் கண்ணாடி, தாடி, மீசை.

"வா சேகர், நீ வரப் போறேன்னு தெரியும். ஞானதிருஷ்டிக் குளிகை காலைல சாப்பிட்டப்பவே தெரிஞ்சு போச்சு. உன் அண்ணன் ராஜனுக்கு



பெரிய பெரிய புத்தகங்கள், ஓலைச் சுவடிகள் என்று இருந்தன.

புத்தகமொன்றைப் புரட்டினார் சாமி. "தேரையர் வர்க்கம், அகத்தியர் திரட்டு, புலிப்பாணி, எதில் கிளாஸ் எடுத்தேன்...."– யோசித்தார்.

"சரி, சேகர் ஒண்ணு செய். போன செப்டெம்பரில்தான் கிளாஸ் எடுத்தேன். உன்னை அந்த இடத்துக்கு அனுப்பறேன்."

"எந்த இடத்துக்கு சார்?"

"அதான், நான் நடத்தின கிளாஸுக்கு. தமிழ்லதான் நடத்துவேன். நோட்ஸ் எடுத்துட்டு வந்துடறியா?"

"போன செப்டெம்பருக்கு அனுப்பறதா? புரியலியே..."

"உனக்கு நோட்ஸ் எடுக்க முடியுமா, முடியாதா?"

"முடியும்."

"அப்ப இரு" என்றவர் பக்கத்து பாட்டிலிலிருந்து களி மண் உருண்டை மாதிரி இரண்டை நீட்டினார். அது தவறி உருண்டு அதே மாதிரி இரண்டு உருண்டைகளுடன் கலந்து கொண்டது.

எல்லாவற்றையும் எடுத்து உற்றுப் பார்த்தவர், ஏதோ இரண்டை நீட்டினார்.

சேகர் அதை வாங்கி விழுங்கி, தண்ணீர் குடித்தான்.

கொஞ்ச நேரத்தில் தலை கிறுகிறுவென்று சுற்றியது.

"ழ...ழ..ழ" என்றான் பேச முடியாமல்.

"அடடே, உனக்கு அந்த மெட்ராஸ் பாஷை குளிகையைக் குடுத்துட்டேனே. பரவாயில்ல, வாயைத் திற" என்றார் சாமி. இன்னொரு குளிகையை உள்ளே தள்ளினார்.

"நீ இப்ப போகப் போற சேகர். திரும்பி வர்றதுக்கு அந்த நெல்லிக்கா சைஸ் குளிகையைப் போட்டுக்கோ."

அவர் சொல்லி முடிப்பதற்குள் சேகரின் தலை 'கிர்ர்...'ரென்று குடை ராட்டினம் மாதிரி சுற்ற ஆரம்பித்தது. உலகம் பூராவும் சுற்றி எங்கேயோ டமாலென்று விழுந்தான் சேகர்.

மயிலிறகாதி சூரணம் பற்றி நோட்ஸ் வேணும்தானே. அதுதான் தேடிக்கிட்டிருக்கேன். உள்ளே வா."

சேகர் அசந்து போய் வாய் பிளந்து நின்றான்.

சுற்றிலும் பார்த்தான் சேகர். விதவிதமான செடி கொடிகள், தொட்டி தொட்டியாய். மேலே ஏதோ சத்தம் கேட்டது. பார்த்தான். தேவாங்கு ஒன்று தலை கீழாகத் தொங்கியது. இவனைப் பார்த்து, "ஓடி விடு, ஓடி விடு" என்றது.

"சார், மேலே ஏதோ குரங்கு மாதிரி தொங்குதே, என்ன?"

"அதுவா, நம்ம ரிக்ஷாக்கார மணி. அவன் தொண்டையிலே ஏதோ பிராப்ளம்னு வந்தான். பேச்சு சரியா வரலை. அதுக்கு மருந்து ரெடி பண்றதுக்குள்ள கலாட்டா பண்ணினான். இப்படி ஆக்கி வெச்சிட்டேன். வா, போகலாம்."

தேவாங்கு மணி மேலேயிருந்து 'போகாதே, போகாதே' என்று கை காட்டினான்.

சாமி ஒரு கதவைத் திறந்தார்.

உயரமான பெரிய டேபிள். அதில் பியூரெட், பிப்பட், குடுவை, தராசுக்கல், ஒரு கம்ப்யூட்டர், மானிட்டர் இன்னும் பக்கத்தில்

கண் விழித்தபோது, புல் தரையும் மணலும் மெத்தென்று இருக்க, நாணல் புதர்கள் பக்கத்தில் தெரிந்தன.

அவன் யோசிப்பதற்குள் மேலேயிருந்து குரல் கேட்டது.

"அடேய், யாரடா அவன்? அங்கே போய் படுத்திருப்பது?"

சேகர் நிமிர்ந்து மேலே பார்த்தான். இரண்டு குதிரைகள் நின்றன. இரண்டு பேர் கையில் ஈட்டி பிடித்துக் கொண்டு, குதிரையி லிருந்து இறங்கி வந்தார்கள். இடுப்பில் நீள கத்தி.

சேகருக்குப் பயமாகிப் போய் விட்டது.

அவனது ஜீன்ஸ், டி-ஷர்ட்டை வினோத மாகப் பார்த்தார்கள். இவனது கிராப்புத் தலை அதிசயமாக இருந்தது.

"யாரடா நீ? சாளுக்கிய ஒற்றனா? சோழ நாட்டவன் போல இல்லையே" — அவர்கள் பேசிய தமிழ் சுத்தமாக இருந்தது.

ஆனால் சேகரின் பதில் வேறுவிதமாக ஒலித்தது. மொழி மாற்றுக் குளிகை விழுங்கி யதன் பலன்!

"இல்ல நைனா. நான் ஸ்பை அல்லாம் கெடையாது. சென்னையில பட்சிகினு கீரேன். நோட்ஸ் அடிக்க வந்தனா, மாட்டிக்கினேன். அல்லாம் அந்த சாமி குடுத்தாரே, அந்த டாப் லட்டோட மிஷ்டீக்கு."

சேகர் கொஞ்ச நேரம் விழித்த பிறகே தான் பேசியது என்ன என்பதைப் புரிந்து கொண்டான். 'ஐயோ, இது மெட்ராஸ் பாஷை குளிகையோட வேலை போலருக்கே'— என்று பதறினான்.

எதிரில் நின்றவர்களும் விழித் தார்கள். "அடேய், நீ பேசுவது கொஞ்சம் தமிழ் போல இருக் கிறது. ஆனால் புரியவில்லை. நீ வேற்று நாட்டு ஒற்றன்தான். ஏமாற்றாதே. வா எங்களுடன்" என்று சேகரைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு நடந்தார்கள்.

கரையேறியதும் அழகான கிராமம் தெரிந்தது.

ஏதோ ஒரு சரித்திரக் காலத்தில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறோம் என்று புரிந் தது சேகருக்கு.


அரண்மனை வந்தது.

வீரன் சேகரைப் பற்றி சொன் னான்.

"என்ன? தமிழ் புரியவில் லையா? நடிக்கிறானா? அடேய், யார் நீ? உண்மையைக் கூறு" என்றார் படைத் தலைவர்.

அவர் குரலே சேகரைப் பய முறுத்த, "சார், நான் சேகருங்க. தப்பெல்லாம் ஒண்ணும் பண் ணலிங்கோ. பேஜார் பண்ணிக் காம வுட்டுடு சாரு" என்றான் சேகர். அவர் காலிலேயே விழுந்து விட்டான் பயத்தில்.

அவர் கண்கள் பயங்கரமாக உருண்டன. "அடேய், நீ என்ன



பேசுகிறாய்? தமிழைக் கலந்து பேசி, கோழையைப் போல காலில் விழுந்து ஏமாற்றவா பார்க்கிறாய்? யாரங்கே, இந்த வேற்று நாட்டு ஒற்றனை, சிறையிலிடு" என்றவர் பயங்கரமாகச் சிரித்துவிட்டுத் திரும்பி நடந்தார்.

சேகருக்கு அழுகை அழுகையாக வந்தது. அவனைச் சிறையில் அடைத்தார்கள்.

வெறுத்துப் போனவன், "வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை..." என்று பாடினான்.

சட்டென்று நிறுத்தினான். அட, பாட்டைப் பாடும்போது மெட்ராஸ் பாஷை வரவில்லை!

மறுபடி பாடினான். "வாழ்வே மாயம், இந்த வாழ்வே மாயம்...." சரியாக வந்தது.

"ஐயா, ஐயா" பின்னாலிருந்து குரல் கேட்டது. திரும்பினால் காவலர்கள் நின்றார்கள்.

"நீங்கள் பாடியது என்ன குறள், வெண்பா?" என்றான் ஒரு காவலன்.

"அது குறள் இல்ல நைனா, நம்ம கண்ணதாசன் பாட்டு."

"ஐயா, சாளரத்தின் வழியே நிலவு தெரிகிறதே. அதைப் பற்றிப் பாடுவீர்களா?"

"வண்ணம் கொண்ட வெண்ணிலவே, வானம் விட்டு வாராயோ..."

காவலர்கள் உற்சாகம் மேலிடக் கூச்சலிட்டார்கள்.

"புலவர்களைச் சிறையிலடைப்பது தவறு. வாருங்கள். அமைச்சரிடமும், படைத்தலைவரிடமும் சென்று கூறுவோம்" காவலர்கள் வெளியே ஓடினார்கள்.

காவலர்கள் உற்சாகமாகத் திரும்பி வந்தார்கள். "புலவரே, உமக்கு விடுதலை. விருந்தினர் மாளிகையில் உம்மைக் கவனிக்க ஏற்பாடாகி இருக்கிறது. நாளைக் காலை, உம்முடைய புலமை அரசவையில் சோதிக்கப்படும். வெளியே வாருங்கள்."

மறுநாள். "வாலிபனே, நீ ஒற்றனா, புலவனா, உண்மையைக் கூறு" – அரசன்.

"சார், ராஜா சார், நான் ஒற்றன் ஒண்ணுமில்லிங்க. பாட்டு கொஞ்சம் தெரியுங்க. அல்லாம் சினிமாப்பாட்டுதாங்க."

"என்ன மா? சினி...மாவா? அதன் பொருள் என்ன அமைச்சரே?"

"நம் வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா போல சினிமாப் பா என இருத்தல் வேண்டும் மன்னவா" அமைச்சர் பதில் சொன்னார்.

"சரி, வாலிபனே, ஏதேனும் பாடு பார்ப்போம்."

சேகர் யோசித்துவிட்டு, "மன்னவன் வந்தானடி, தோழி, மாயவனோ..." என்று முழுதாகப் பாடினான்.

"இலக்கணமேதுமில்லை மன்னா. ஆனால் எளிமையாக ஏதோ ராகத்துடன் இருக்கிறது."

மன்னன் சேகரை சுவாரசியமாகப் பார்த்தான்.

"சரி, சேகரா, தமிழைப் பற்றிப் பாடு" என்றார் அமைச்சர்.

"தமிழுக்கும் அமுதென்று பேர்..." என்று பாடினான்.

மன்னன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

● உலகிலேயே மிக ஆழமான ஏரி சீனாவில் உள்ள பைகால் ஏரி.



பூட்டு அருங்காட்சியகம்

திண்டுக்கல் என்றவுடன் பூட்டுதானே ஞாபகம் வரும். உலகிலேயே பூட்டுகளுக்கான அருங்காட்சியகம் ஜெர்மனியிலுள்ள வெல்பெர்ட் நகரத்தில் அமைந்துள்ளது. ஆதி காலத்து கனமான பூட்டு, சாவிகள் முதல் நவீன கால பூட்டு சாவிகள் வரை இங்கு உண்டு.

– நெ. இராமன்



'டியர் சேகர். உன்னைத் தேடி நானும் வருகிறேன். நீ திரும்பி விட்டால் டேபிள் மீது ஒரு குளிகை இருக்கிறது. அதை முழுங்கிவிடு. நோட்ஸ் பிரிண்டவுட் வெச்சிருக்கேன். எடுத்துக்கோ' — சாமி.

குளிகையை எடுத்தான் சேகர். கம்ப்யூட்டர் மானிட்டரின் அடியில் இன்னொன்றும் இருந்தது. எடுத்துக் கொண்டு வெளியே வந்தவனைப் பார்த்து, மேலேயிருந்த தேவாங்கு கீச் கீச் என்றது. கையிலிருந்த குளிகையைக் கொடுத்ததும், லபக்கென்று விழுங்கியது.

பிரிண்டவுட் பேப்பருடன் வெளியேறினான்.

கேட்டைத்தாண்டி தன் சைக்கிளை எடுக்கும்போது, பின்னால் குரல் கேட்டது. லுங்கி, பனியனோடு ஒரு கிழவன் ஓடி வந்தான். "தம்பி, நல்லாயிரு தம்பி. சின்னப் புள்ளயா கீறே, எனக்குத் திரும்ப பேச்சும் குடுத்து, ஆளாவும் மாத்திட்ட. ரொம்ப ரொம்ப டாங்ஸ் நைனா. நான்தான் மணி சாரே" என்றான்.

"சரிப்பா, வரேன்" என்ற சேகர் சைக்கிளில் ஏறினான். வீட்டுக்கு வரும்போது மாலை மணி மூன்று.

"ஏண்டா லேட்?" என்றான் அண்ணன்.

மெதுவாக எல்லாவற்றையும் சொன்னான்.

சேகர் இன்னும் கூட அந்த மாலையைப் போட்டுக் கொண்டுதான் இருக்கிறான்.

"சேகரா, நீ தமிழைப் பற்றிப் பாடியதற்கே உன்னை மன்னித்து விடலாம். உன்னை இந்தச் சபையில் பிரதானியாக்குகிறேன். எனது பரிசு இதோ, பெற்றுக் கொள்" என்ற மன்னன், தன் கழுத்திலிருந்த ஒரு செங்கதிர் மாலையைக் கழற்றி, சேகருக்குக் கொடுத்தான். அவைப் புலவருக்குப் பொறாமை மனதில் கொழுந்து விட்டு எரிந்தது.

காலையில் நந்தவனம் பக்கம் போனான் சேகர். ஒரு மரத்தின் கீழ் நின்ற போது காலில் எறும்பு கடித்தது. குனிந்தான்.

காற்றில் 'விஷ்க்' என்று சத்தம் கேட்டது. ஒரு சின்ன கத்தி மரத்தில் குத்தி நின்றது. திரும்பினான்.

அவைப்புலவர் இரண்டு தடியர்களுடன் நின்றார். "ஐயா, புதுமைப் புலவரே, உம் கதை முடியப் போகிறது" என்றார்.

'விஷ்க், விஷ்க், விஷ்க்' என்று மூன்று கத்திகள் சீறின.

சேகர் பாக்கெட்டிலிருந்து குளிகைகயை எடுத்து ஓடியபடியே வாயில் போட்டுக் கொண்டான்.

தலை கிர்ரென்றது. மேலே போனவன், "யோவ், புலவர் நைனா. ராஜா சார் கிட்ட சொல்லிடு, டாடா, பைபை" என்று குதித்தான். கீழே விழாமல் காற்றில் காணாமல் போனான்.

சேகர் திரும்பக் கண் விழித்தபோது சாமியின் ஆராய்ச்சிக் கூடத்தில் இருந்தான். டேபிள் மீது பேப்பரில் ஏதோ எழுதியிருந்தது, படித்தான்.

● உலகிலேயே மிக நீளமான ரயில்வே நடைபாதை பீகாரிலுள்ள சோன்பூர் ரயில் நிலைய நடைபாதை. — உ. சங்கரலிங்கம்



முதல் பரிசு

டி.ஜி.சிவப்ரியா,
ஆறாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி,
காஞ்சிபுரம்.

வண்ணத் தூரிகை

பிப்ரவரி இதழில் ஒட்டகச் சிவிங்கி என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். போட்டியில் கலந்து கொண்ட ஏராளமான ஒட்டகச் சிவிங்கிகளில் ஐந்து பேர் வரைந்த படங்கள் பரிசைத் தட்டி, உங்கள் முன் இருக்கின்றன.



இரண்டாம் பரிசு


பி. பிரேம் பிரபாகர்
ஐந்தாம் வகுப்பு,
ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி
தூத்துக்குடி.

ஒட்டகச் சிவிங்கி



மூன்றாம் பரிசு

ந. கோபி,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சங்கரவித்யாலயா
மெட்ரிகுலேசன் பள்ளி, பம்மல்,
சென்னை.



ஆறுதல் பரிசு

என். அசோக்
ஆறாம் வகுப்பு,
ஆர்.சி. மேல்
நிலைப்பள்ளி,
திருச்சி.



ஆறுதல் பரிசு

க. ஸ்ரீனிவாஸ்,
எட்டாம் வகுப்பு,
வித்யா நிகேதன்
பள்ளி, புலியகுளம்,
கோவை.

கதையும் புதிரும்

'முந்திரிக் கொட்டை!' - இதுதான் முருகேசனுக்கு அவன் பள்ளிக் கூடத்தில் பட்டப் பெயர்! யார் எது சொன்னாலும் குறுக்கிட்டு, தன்னை அதிமேதாவியாகக் காட்டிக் கொள்வான்.

கணித ஆசிரியர், ''நாளைக்கு வரும்போது எல்லாரும் பரீட்சைக்குத் தயாராக வரவேண்டும்'' என்று சொல்வார்.

உடனே மு.மு., ''நாளைக்கு சனிக்கிழமை சார், பள்ளிக் கூடம் கிடையாதே'' என்பான். 'மறுமுறை பள்ளிக் கூடம் வரும்போது' என்ற அர்த்தத்தில் சொல்கிறார் என்பது அவனுக்குத் தெரியும். தெரிந்தே வம்பு பண்ணுவான்.

''வகுப்பறையில் யாரும் பேசக் கூடாது'' என்று ஆசிரியர் சொன்னால், ''நீங்க கேள்வி கேட்டால் கூட பதில் சொல்லக் கூடாதா, சார்?'' என்று திருப்பிக் கேட்பான்.

இப்படி ஒன்றா, இரண்டா? இதுபோன்ற நிகழ்ச்சிகள் விளைவாக அவன் பெற்ற பெயர்தான் 'முந்திரிக் கொட்டை'!

ஒரு சமயம் கல்வி அமைச்சரே அந்தப் பள்ளியின் ஆண்டு விழாவுக்கு வந்தார். அவர் அந்தப் பள்ளியின் பழைய மாணவர். ஹெட்மாஸ்டரும் மற்ற ஆசிரியர்களும் பெருமிதத்தோடு வரவேற்றனர். பள்ளியின் மேம்பாட்டுக்குச் சில கோரிக்கைகளையும் வைத்தனர். முடிந்த வரை நிறைவேற்றித் தருவதாய் வாக்களித்தார் அமைச்சர் அறிவொளி. பின்னர் விழாவில் மாணவரிடையே அவர் பேச வேண்டியிருந்தது.

''நான் அரசியலில் ஈடுபட்டதிலிருந்து எத்தனையோ கூட்டங்களில் பேசி இருக்கிறேன். ஆனால் இங்கே பேசத் தயங்குகிறேன். ஏனென்றால் இங்கே அமர்ந்திருக்கிற முதுநிலை ஆசிரியர்கள் என்னைவிட அறிவாளிகள். என்னை உருவாக்கியவர்கள். மாணவ மணிகள் உன்னத நிலைக்கு உயர ஏணிப்படிகளாய் நின்று உதவுகிறார்கள். ஆனால் அவர்கள் அதே நிலையில் அடக்கத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் முந்நிலையில் முந்திரிக் கொட்டைபோல பேச நான் விரும்பவில்லை..''

'முந்திரிக் கொட்டை' என்று அமைச்சர் குறிப்பிட்டதும் மாணவரிடையே சின்னதாக ஒரு சிரிப்பலை - சலசலப்பு - எழ,



முந்திரிக்கொட்டை முருகேசன்

தலைமையாசிரியர் கை உயர்த்தி அமைதிப்படுத்தினார். அமைச்சர், தொடர்ந்து ஒரு திருக்குறளைச் சொல்லி தமது உரையைச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

அவர் போன பிறகு, ''முந்திரிக் கொட்டை!'' என்று ஒரு மாணவன் கூச்சலிட சுற்றி இருந்த அனைவரும் கட்டுக் கடங்காமல் கேலியாகச் சிரித்தனர். முருகேசன், தனக்காகவே அமைச்சர் வந்து, தன்னைப் பற்றியே பேசியதுபோல் உணர்ந்தான். முதன்முறையாக அவனுக்கு இது அவமானமாகத் தோன்றியது.

வீடு திரும்பியதும் அப்பாவுடைய திருக்குறள் புத்தகத்தை எடுத்து, அமைச்சர் குறிப்பிட்ட குறளைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தான். விளக்க உரையும் அவனுக்காகவே எழுதப்பட்டது போலிருந்தது.

அன்று முதல் முந்திரிக் கொட்டையாக செயல்படுவதை விட்டு விட்டான். ஆனாலும் அந்தப் பட்டப் பெயர் தேய்ந்து மறைய பல நாட்களாயிற்று!

முருகேசனைத் திருத்திய அந்தக் குறள் என்ன? நீங்களும்தான் தேடி எடுத்து எழுதிப் பாருங்களேன்! அதற்கு முதற் சொல் அகராதி உங்களுக்கு உதவுமே!


நன்றென் றவற்றுள்ளும் ______ ______
______ ______ செறிவு.

- தம்பிப் பயல்


மந்திர மாமரம்
சோமன் மிகவும் நல்லவர். அவரிடம் ஒரு மந்திர சக்தி இருந்தது.
மாம்பழம் வரவழைத்து சாப்பிடலாம்.
காட்டை அடைந்த சோமன் மந்திரத்தால் மாம்பழங்களை வரவழைத்தார்.
ரொம்ப இனிப்பா இருக்கே!
பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் எடுத்துட்டுப் போகலாம்.
இதை நாகன் என்ற வேடன் கவனித்தான்.
நான் காண்பது நிஜமா? கனவா?
எப்படி மாம்பழம் கிடைத்தது?
ஐயா, எனக்கு மாம்பழம் தர்றீங்களா?
எவ்வளவு வேணுமோ எடுத்துக்க.


ஐயா, எனக்கும் இந்த மந்திர சக்தியைக் கற்றுக் கொடுங்கள்.
சோமன் ஒத்துக் கொண்டார்.
நீ பேராசைபட்டாலோ, பொய் சொன்னாலோ இந்த மந்திர சக்தி அழிந்து விடும்.
நான் அப்படி செய்ய மாட்டேன்.
நாகன் மந்திர சக்தியைப் பயன்படுத்தினான்.
ஆஹா! எவ்வளவு மாம்பழங்கள்!
மீதி மாம்பழங் களை விற்று விடலாம்.
நாட்கள் சென்றன. மாம்பழங்களை விற்று நாகன் பணக்காரனானான்.
என்னைப்போல பணக்காரன் இந்த ஊரில் யாருமில்லை.
நாகனைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசன் அவனை அழைத்தான்.
என் முன்னே உன் மந்திர சக்தியைக் காட்ட முடியுமா?
செய்து காட்டறேன் அரசே!


மந்திர சக்தியைப் பயன்படுத்திக் காட்டினால் நான் இன்னும் பிரபலமாவேன்.
நாகன் மந்திர சக்தியைப் பயன்படுத்தினான்.
இதோ பாருங்கள் அரசே!
நீ உண்மையிலேயே பெரிய ஆள்தான்!
எப்படி இந்த மந்திரத்தைக் கற்றுக் கொண்டே? உன் சொந்த முயற்சியா, இல்லை யாராவது சொல்லிக் கொடுத்தார்களா?
அவனுடைய அகந்தை அவனை உண்மையைச் சொல்ல விடவில்லை.
ஹா... ஹா... நானே தவமிருந்து, கஷ்டப்பட்டு இந்த மந்திர சக்தியைப் பெற்றேன் அரசே!
உடனே மாமரம் மறைந்தது.
ஐயோ! என் அகந்தையால் பொய் சொல்லிவிட்டேன். எல்லாம் போச்சு!



சண்டை நடக்கும் 'அமைதி' நகரம்!

உலகில் ஏராளமான நாடுகள் இருக்கின்றன அல்லவா? அவற்றில் சிலவற்றின் தலைநகரங்களைப் பற்றிய சுவாரசியமான தகவல்களைப் பார்க்கலாமா?'


- அர்ஜென்டினாவின் தலைநகரம் போனஸ் அயர்ஸ். அர்ஜென்டினா நாட்டில் வந்து குடியேறிய ஸ்பெயின் நாட்டவரால் 1535ல் உருவாக்கப்பட்ட நகரம் இது. போனஸ் அயர்ஸ் என்றால் 'நல்ல காற்று' என்று பொருள்.
- சைப்ரஸ் நாட்டின் தலைநகரம் நிக்கோஸியா. கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே, கிரேக்கர்களின் வெற்றிக் கடவுளான 'நிக்' பெயரால் உருவாக்கப்பட்டது இந்நகரம்.
- ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸ், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், அங்கு வாழ்ந்த பாரிஸீ என்ற பழங்குடி இனத்தவரின் பெயரால் குறிப்பிடப்படுகிறது.
- இஸ்ரேல் நாட்டின் தலைநகரம் ஜெருசலம். ஹீப்ரு மொழியில் இதற்கு அமைதி நகரம் என்று பொருள் (இங்கு இன்றும் இஸ்ரேலியர்களுக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருக்கிறது.)

இது ஒரு பொது அறிவுக் கேள்வி. செம்மறியாட்டின் ரோமத்திலிருந்துதான் கம்பளி கிடைக்கிறது. கம்பளி நூல் கொண்டு நாம் ஸ்வெட்டர் தயாரித்து அணிகிறோம். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான்.

செம்மறி ஆட்டின் மீது தண்ணீர் படுகிறபோது, அதன் மேல் உள்ள கம்பளி ரோமம் ஈரமாவதில்லை. ஆனால் கம்பளியில் தயாரிக்கும் ஸ்வெட்டரில் தண்ணீர் பட்டால், அது நனைந்து ஈரமாகிவிடுகிறது. இதற்குக் காரணம் என்ன?

கம்பளி ரோமம், ஆட்டின் உடல் மீது இருக்கும் போது, அதில் உள்ள ஒருவித எண்ணெய்ப்பசை, தண்ணீர் ஒட்டாமல் தடுத்து விடுகிறது. ஆனால், ஆட்டிடமிருந்து பெறப்படும் கம்பளி ரோமம், பதனிடும் தொழிற்சாலைகளில், ரசாயனப் பொருட்களால் பதப்படுத்தப் படும்போது, எண்ணெய்ப் பசை தன்மையை இழந்து விடுகிறது. அதனால்தான் தண்ணீர் பட்டவுடன் நனைந்து விடுகிறது.


இந்த மனித உருவங்களின் தலை, கை, கால்களில் உள்ள



எண்களைக் கூர்ந்து கவனித்து விட்டு, இரண்டாவது மனித உருவத்தின் கேள்விக் குறிப்பிட்ட காலில் என்ன எண் இடம் பெற வேண்டும் என்று கண்டுபிடித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

விடை: கடைசியில் பார்க்கவும்.

ஒரு நகைச்சுவை ரசிக்கலாமா?



ஒரு கிளி இருந்தது. அதற்கு 'அதிலென்ன சந்தேகம்?' என்ற வார்த்தைகள் தவிர வேறு எதுவும் பேசத் தெரியாது. அதனை வளர்த்தவர், புதிய வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்க எவ்வளவோ முயற்சித்தும், கிளி புது வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளவே இல்லை. வெறுத்துப் போன அவர், கிளியை யாருக்காவது விற்று விடுவது என்று முடிவு செய்தார்.

ஒருவழியாக, கிளியை வாங்கிக் கொள்ள ஒருவர் முன் வந்தார்.

"என்ன விலை?" என்று கேட்டார் வாங்க வந்தவர்.

"நானூறு ரூபாய்" என்றார் கிளி வளர்ப்பவர்.

"இந்தக் கிளிக்கு நானூறு ரூபாய் அதிகமில்லையா?" என்று வாங்க வந்தவர் கேட்க, இடையில் நுழைந்த கிளி, தனக்குத் தெரிந்த, "அதிலென்ன சந்தேகம்?" என்று சொன்னது.

"அட! மனிதர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, தானும் உரையாடலில் கலந்து கொண்டு, இவ்வளவு புத்திசாலித்தனமாகப் பேசுகிறதே இந்தக் கிளி!" என்று வியந்து, பேரம் பேசாமல் நானூறு ரூபாய் கொடுத்து கிளியை வாங்கிக் கொண்டார் அவர்.

சீக்கிரமே கிளியின் சாயம் வெளுத்தது. 'அதிலென்ன சந்தேகம்?' என்பதைத் தவிர வேறு எதுவும் இந்தக் கிளிக்குப் பேசத் தெரியாது என்று புரிந்து கொண்டார் கிளியை வாங்கியவர்.


ஏமாந்து விட்டோமே என்ற ஆதங்கத்தில், "நானூறு ரூபாய் கொடுத்து இந்தக் கிளியை வாங்கினேனே! நான் ஒரு சரியான முட்டாள்!" என்று தன்னைத் தானே நொந்து கொண்டார்.

சட்டென்று கிளி சொன்னது: "அதிலென்ன சந்தேகம்?"


புதிர் கணக்கின் விடை: *3. எப்படி* தெரியுமா? இரு கைகளிலும் உள்ள எண்களின் கூட்டுத் தொகையும், தலை மற்றும் கால்களில் உள்ள எண்களின் கூட்டுத் தொகையும் சமம். அதன்படி பார்த்தால், கூட்டுத் தொகை 19 வரவேண்டும். அதிலிருந்து ஒரு கால் மற்றும் தலையில் உள்ள எண்களைக் கழித்தால் கிடைப்பது மூன்று தானே!

— கௌதம் ராம்

படத்தை நிறைவு செய்யுங்கள்!



தவறு என்ன?



விடை: உலர வைத்த துணிகளும் புடவை முந்தானையும் மாற்றுத் திசைகளில் காற்றில் பறக்கின்றன.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

